
# சுதந்திரப் பறவைகள்



# சுதந்திரப் பறவைகள் - பறவை-7

## தை - மாசி

உள்ளே - - - - - - -


1. உறுதியான பாதையில் நாம் ஒன்ருய்
2. மலர்கின்ற பருவத்திலே - - - - -
3. கல்வியில் கைவைத்தது அன்று
4 அர்ச்சனைப் பூக்களின் ஆசைகள்
5. எம் மக்களின் பார்வைக்கு
6. எம் மக்களின் இடர்தீர
7. பொறுத்திரு சோதரனே
8. கூண்டுக்கிளிகளின் கூக்குரல்
9. எடுப்போமே சபதம், நாமும் நாளையும்
10. விழிக்க வைப்போம்
11. வீரமே உங்கள் நாதமே
12. தங்கைக்கோர் கடிதம்
13. என்றும் எங்களுள் ஜீவித்திருக்கும் கடமை மறவா
14. மரங்களைப் பாதுகாப்போம்
15. தமிழீழத்தின் வடக்கிலிருந்து
16. பேதம் அகற்ற வந்தவன்


★

விலை:- 5/-

அட்டைப்படக் கவிதை

# விடிவு தான் முடிவு

நாங்கள் கனவுகளைச் சுமக்கவில்லை
கடும் இலட்சியத்தை சுமக்கின்றோம்.
சுகங்களைத் தேடவில்லை
சுதந்திரத்தைத் தேடுகின்றோம்.
இலட்சியத்தை சுமப்பதில்
இன்பம் தான் காண்கின்றோம்.
அடிமை வாழ்வுக்கு
முடிவு காண்பதில்
உறுதியாய் நிற்கின்றோம்
உண்மையாய் உழைக்கின்றோம்.
ஆனால், இம் மண்ணின் சில மாந்தர்
அடிமை வாழ்வில் இன்பம் காண்பவர்கள்.
அதனால்தான் உண்மை வாழ்வு இங்கு வாழ
வாய்ப்பு வசதி இருந்தாலும் சிலர்
உழைக்காது உல்லாச வாழ்வு வாழ
ஓடுகின்றார் அந்நிய தேசம்.
பிச்சைப்பணம் வாங்கி பகட்டுவாழ்வு வாழ
பிறதேச முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றார்
குருதி ஆற்றினுள் நிதம் எம் மக்கள் இங்கே
ஆனால் அந்நிய நாட்டின் புகழ்ப்பாட்டுக்கள்
பாடும் சிலர் அங்கே
'பிரச்சனைகள் இல்லாமல் இங்கு நாம்'
இப்படித்தான் இன்னும் அவர்கள்
அவர்கள் செயற்கை ஒளிதேடும் விட்டில்கள்
நாங்கள் விடிவே வேண்டும் என்று
விடாப்பிடியாய் நிற்பவர்கள்.

★

# உறுதியான பாதையில் நாம் ஒன்ருய்

தமிழீழத்தை நோக்கியஆயுதப் போராட்டவரலாருனது தன்து பதினைந் தாவது ஆண்டினுள் புகுந்து கொள்கிறது.

படிப்படியாக வளர்ந்து வந்த இந்தப் போராட்டம் எத்தனையோ தியாகச் செம்மல்களை எவ்வளவோ தமிழ் மக்களின் உயிர்களை உடமைகளை விழுங்கிவிட்டது. ஆயினும் இதற்காக விக்கித்து நின்று, விரக்தியுற்று மனம் தளர்ந்து போய்விட வேண்டியதில்லை. எத்தனையோ நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களின் இரத்த வரலாறு இப்படித்தான் எழுதப்படுகிறது.

ஜனநாயகம் என்று பேசிப்பேசி ஜனநாயகத்தை மிதிப்பவர்களும் சோஷலிசம் எனச் சொல்லிச் சொல்லி சோஷலிசத்தை அழிப்பவர்களுமான கயவர் கூட்டத்தின் கொட்டம் அடங்கும் வரை, இனப்பிரச்சனை தீரவேண்டும் என்று கூறிக்கொண்டு இனவாதத்தைக் கக்கிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய வால் பிடிகளின் அதிகாரத்தை அழிக்கும் வரை, நமது இழந்த இறைமைகள் மீட்கப்பட்டு ஒரு புதிய ஜனநாயக மக்களரசு நிறுவப்படும் வரை இந்தப் போராட்டம் வளர்ந்து செல்லும் என்பது வரலாறு தந்த பாடம். உருக்குப் போன்ற உறுதியோடு எத்தனை இழப்புகளின் மத்தியிலும் மனம் தளராது போராடுகின்ற இளைஞர்களின் வீரம் காட்டும் உண்மை.

இளைஞர் சமுதாயத்தின் விடுதலை உணர்வை அதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட ஆயுத போராட்டத்தை ‘சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேருமா’ என்றெல்லாம் மூத்தோர் சிலர் குறை கூறிய காலம் மலையேறிப் போய்விட்டது. ‘எங்களால் முடியாதது எதுவுமே இல்லை’ என்ற திடமான தன்னம்பிக்கை கொண்டு உழைக்கும் விடுதலைப் போராளிகளை மனப்பூர்வமாகவே அங்கீகரித்து ஆதரவளிப்பதோடு தம்மையும் போராட்டப்பாதையில் இணைத்துக்கொண்டு நடைபோட எம்மக்கள் தயாராகிக் கொண்டு வருகிருர்கள்.

சந்திக்கவே முடியாத துருவங்கள் எல்லாம் சந்திக்கும் விசித்திரங்கள் நடக்கின்றனவே என வியப்புடன் சும்மா இருந்து விமர்சனம் மட்டும் செய்து கொண்டிருந்தால் விடுதலை சுலபமாகக் கிடைத்து விடாது. மக்கள் போராட்டமாக வளர்ந்தால் தான் போராட்டத்திலும் பொருள் இருக்கும். பெறப் போகும் விடுதலையிலும் அர்த்தமிருக்கும். தம் ஆசை, பாசம் அனைத்தையும் துறந்து விடுதலைப் போராட்டத்துள் தம்மை இணைத்து எம்மக்கள் விடுதலைக்காகவே தம் உயிரைத் துறந்த போராளிகளின் மரணங்கள் அர்த்தமற்றதாகி விடக் கூடாது.

தமிழீழப் பிரதேசத்தில் மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள். இதில் பங்களிக்கின்றவர்களின் தொகை மிக மிகச் சொற்பமே போராட்டத்தில் அவர்கள் பங்கு பற்றுவது போராட்டத்திற்குள் ஒரு போராட்டமாகவே உள்ளது. சமுதாயத்தின் பல பழைய கோட்பாடுகளும், மூடநம்பிக்

கைகளும் பெண்களைச் சிறைப்படுத்துகின்றன. சமுதாயத்தின் இவ்வாறான பிற்போக்குத்தனத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டே பெண்கள் தேசிய விடுதலையில் பங்கெடுக்க வேண்டியுள்ளது. சுதந்திரம் நம்மைத் தேடி என்றுமே வராது. எமக்குள்ள சுதந்திரத்தை நாம் தான் போராடிப் பெற வேண்டும் என்பதை எவரும் விளங்காமல் இருக்கமாட்டார்கள்.

பெண்கள் தம்மை ஒரு அணியாகத் திரட்டிக் கொண்டே போராட்டத்தில் பங்களிப்பது சாத்தியமாகவுள்ளது. சுதந்திரப்பறவைகள் அமைப்பினராகிய நாமும்அந்த வகையில்தான் செயல்படுகிறோம். ‘இப்படித்தானே பெண்கள்’ என்று சிலர் இழித்துரைக்கும் நிலையை மாற்றி ‘இப்படியும் முடியுமா பெண்களால்? என்று வியக்கும் விதத்தில் செயல்திறன் மிக்க பெண்களாக அனைத்து பெண்களையும் உருவாக்கி தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பின் மகத்துவத்தை உணர்த்துவதோடு மக்களை ஒன்றிணைத்து மக்கள் போராட்டமாக எமது விடுதலைப்போராட்டம் மலர்வதற்கு பெண்களின் பங்கு அத்தியாவசியம் தான் என்பதை எல்லோரும் உணரும் விதத்தில் எம் செயற்பாடுகளை முன்னெடுப்போம் செயலோடு நிற்காமல் எழுத்துக்களினூடாகவும் மக்கள் போராட்டமாக பரிணமிபபதற்கு உதவ வேண்டும் என்ற நோக்குடன் வெளி வருகிறது. சுதந்திரப்பறவைகள் வெளியீடு விடுதலைக்கான முற்போக்குப் பணிகளில் பங்கெடுத்து வெற்றிக்கான உறுதியான பாதையில் ஒன்றாய் நிற்போம்.

★

**தொடர்புகட்கு:-**

செல்வி. ந. நித்திலா
முதலாம் வருடம்
பௌதிக விஞ்ஞானம்
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

★

அனுப்பப்படும் படைப்புக்களில் மாற்றங்கள் செய்ய சுதந்திரப்பறவைகள் வெளியீட்டுக் குழுவுக்கு உரிமையுண்டு.

★

# மலர்கின்ற பருவத்திலே

**"உடல் ஒழுக்கம், அறிவு, ஆன்மா ஆகியவற்றில் பூரண விருத்தி உடையவனே முழுமனிதனாவான்"**

நமது இளஞ் சந்ததியினர், சிறந்த குடிமக்களாகவும், தமது உலகைப்பற்றிய பூரண அறிவு உள்ளவர்களாகவும் தன்னம்பிக்கையும், திறமையும் உடையவர்களாகவும், வாழ்வை எதுவித அச்சமுமின்றி எதிர்நோக்குபவர்களாகவும், 20ம் நூற்றாண்டின் இன்றைய வாழ்க்கையுடன் இசைந்து வாழக்கூடியவர்களாகவும், கூட்டுறவு மனப்பான்மை உடையவர்களாகவும், முருகியல் உணர்வும், உயர்ந்த ஒழுக்க விழுமியங்களும் உடையவர்களாகவும் வளருமாறு அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். இவற்றை அவர்களுக்கு எவ்வாறு அளிப்பது? அவற்றை எப்படிக் கற்பிப்பது? எத்தகைய கல்வியனுபவங்களைக் கொடுப்பது? இவற்றை எவ்வாறு திட்டமிடலாம்? இவைபோன்ற வினாக்களுக்கு அறிவியல், உளவியல் அடிப்படையில் கல்விச் சிந்தனையாளர்கள் காட்டிய ஒரு திட்டமிட்ட ஒழுங்கு முறையில் அமைந்ததே பாலர் கல்விமுறையுமாகும்.

நம் நாட்டுக் கல்வித் திட்டத்தின்படி ஒரு பிள்ளை ஐந்து வயது நிறைந்தபின்தான் பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப் படுகின்றான். எனவே அதற்குமுன், அதுவரை அவனது அறிவுவளர்ச்சி என்னநிலையில் உள்ளது என்பதே கேள்வி. பிறநாடுகளில் ஆண் பெண் இருபாலாரும் தொழிலுக்குச் செல்வதால் அவர்களின் பிள்ளைகளை அந்தந்த வயதிற்கொப்ப, பிள்ளைமடுவங்களிலும், பாலர் பாடசாலைகளிலும் அரசாங்க நிறுவனங்களே பராமரிப்புச் செய்கின்றனர். நம் நாட்டிலும் ஆரம்பத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகள் உள்ள இடங்களிற் காணப்பட்ட பிள்ளைமடுவங்கள், பராமரிப்பு நிலையங்கள் இப்பொழுது செறிந்து காணப்படுகின்றன.

பிள்ளைகளின் வளர்ச்சி நிலையைப் பருவங்களாக வகுக்குமிடத்து 1-5 வயதுவரை குழந்தைப் பருவம்; 5–12 வயதுவரை பிள்ளைப்பருவம்; 12–15 வயதுவரை முன்கட்டிளமைப்பருவம்; 15-20 கட்டிளமைப் பருவம் 20மேல் முதிர்பருவம் எனப்படும். ஒவ்வொரு பருவமும் அதற்குரிய தேவைகளையும், விருப்புகளையும் கொண்டமைவதுடன், இயற்கை வளர்ச்சியில் தானாகவே பூரணப்படும். உடலாலும் உள்ளத்தாலும் மென்மையுடைய குழந்தைப் பருவத்திற்குத் தகுந்த காப்புணர்ச்சி தாயும் தந்தையும் அளிக்க வேண்டும். இயற்கையான வீட்டுச்சூழலே இதன் கல்விக்குரிய சூழலாகும். புத்தம்புதிதாக மலர்ந்திருக்கும் குழந்தை உள்ளத்தை எந்த வகையாலும் மாசுபடுத்தக் கூடாது. பிள்ளைகள் தமது வயதுக்கேற்ற முதிர்ச்சியும் வளர்ச்சியும் அடையும்போதே கற்றலுக்குத் தயாராகின்றன. எனவே அதற்கு முன்னர் வலிந்து கற்பிப்பதால் எவ்விதபயனும் இல்லை. முழுமையான ஆரம்பக்கல்வி ஐந்து வயது முடிந்ததும் ஆரம்பமாகிறது.

தாய் தந்தையின் காப்பில், அரவணைப்பில், வீட்டுச்சூழலில் வாழ்ந்த ஒருபிள்ளை ஆரம்பக்கல்வியைத் தொடங்க முற்றிலும் மாறுபட்ட வேறொரு சூழலில் அதாவது பாடசாலைச் சூழலுக்கு வருகிறான். அப்பொழுது ஏற்படும் பிரிவு, அதனுள்ளத்தைப் பாதிக்காதவகையில் இருக்கவேண்டும். பாடசாலைக் கல்வி பெறுமுன் 4–5 வயதுவரை அப்பிள்ளையை கற்றல் நிலைக்குத் தயாராக்குவதே பாலர் பாடசாலையின் நோக்கமாகும். பாலர்பாடசாலையில் தூலசிந்தனைக்கு முற்பட்ட பருவமாகப் பிள்ளை இருப்பான். நாலரை வயதுவரை பிள்ளையின் சிந்தனை

விரிவடைகிறது. ஆனால் சரியான கருத்து நிலை எண்ணக்கருவைப் பெறமுடியாதிருப்பான். இப்பருவத்திற் பாவனை செய்து விளையாடுகிறான். அவனது தருக்க சிந்தனை வளர்ச்சியடையாதுள்ளது. பின்னர் புலக்காட்சியைக் கொண்டே எண்ணக்கரு விருத்தியடைகிறது. பிள்ளை படத்திலுள்ள பொருட்களை மாத்திரமே 4வயதில் சொல்லவல்லவனாயிருப்பான்.

எனவே பாலர்பாடசாலைகளில் குழந்தை மையக்கல்வியே இடம்பெறவேண்டும். அதற்கு அன்பு, கணிப்பு, காப்பு தேவையாகிறது. குடும்பச் சூழலில் பெற்றோர் பிள்ளைகளுடன் மழலைமொழி பேசுவார்களானால் குழந்தைகளின் மொழிவளர்ச்சியில் திருத்தம் ஏற்படாது. எனவே பாலர்பாடசாலையிற் குழந்தைகளின் மொழி வளர்ச்சிக்கு ஏற்ற காட்சிப் பொருட்களையும், படங்களையும் பயன்படுத்துதல் அவசியம்.

பாலர் கல்வியைப்பற்றி மேரியா மொன்டிசோரி அம்மையார் (இத்தாலிய நாட்டைச் சேர்ந்த உளமருத்துவர்) கூறும் கருத்து என்னவெனில்

1. சுதந்திரமாகக் குழந்தைகள் தாம் விரும்பியவாறு கற்கவேண்டும். எவருடைய குறுக்கீடும் இருக்கக் கூடாது. குழந்தையின் தனித்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

2. தமது சுய முயற்சியின் மூலமே குழந்தைகள் கற்கவேண்டும். அதற்குரிய துணைக்கருவிகளைப் பாடசாலைகள் வழங்க வேண்டும்.

3. அறிவுக்கு வழிதிறக்கும் வாசல்களான புலன்களுக்கும், தசைகளுக்கும் நன்கு பயிற்சியளிக்க வேண்டும்.

4. சமூக உணர்ச்சிகளைப் பிள்ளைகளிடம் ஏற்படுத்தக் கூடிய இயற்கையான குழுக்களாக அவர்களைப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

5. ஆசிரியரின் பணி கற்பிப்பதல்ல இயக்குநராக இருந்து பிள்ளைகட்கு வழிகாட்டலும், ஊக்கமளித்தலுமே அவரின் பணியாகும்.

எனவே பாலர்பாடசாலைக் குழந்தைகள் விளையாட்டை விரும்பும் பருவத்தினர். அவர்களின் விளையாட்டை நல்லவழியில் திசைதிருப்பிக் கற்றலுக்கு உதவியாக அமையும் வகையில் வழிப்படுத்த வேண்டும் குழந்தைகள் விளையாட்டு மூலமே வளர்ச்சிபெற வேண்டும். உடலும் உள்ளமும் ஒருங்கே செயற்பட வேண்டும். உண்மைப் பொருட்கள், காட்சிப்படங்களைப் பார்த்தால் இவர்கள் தொட்டுப்பார்த்தல்; தரம்பிரித்தல்; அவற்றைப் பற்றிப் பாடுதல்; விளையாடுதல் போன்ற செயல்களைச் செய்வர். இச்செயல்கள் காரணமாகக் குழந்தைகளிடம் இயல்பாக ஏற்படும் ஊக்கல்களின் மூலம் அவர்கள் தாமாகவே செயற்பட வேண்டும். அப்படிச் செயற்படும்போது அவர்கள் ஆக்கத்திறன்களை வளர்க்கக்கூடிய கைவேலைகள் பலவற்றையும் செய்கின்றார்கள். மலர்கின்ற இளம் பருவத்துக்கல்வி மகிழ்ச்சிகரமாக அமைய வேண்டும். குழந்தைகள் தம் விருப்பத்திற்கேற்றபடி ஆடியும், பாடியும், விளையாடியும் தமது திறன்களை வளர்த்துக் கொள்கின்றனர். எனவே அவர்கள் கூடிவிளையாடுமிடம் ஒரு பூஞ்சோலைபோல் விளங்கவேண்டும்.

ரூசோவின் சிந்தனையில் மலர்ந்த பிரச்சினை தீர்த்தல், விளையாட்டுமுறை, பாலர் பாடசாலை போன்ற தற்காலக் கருத்துக்கேற்ப அதிகார அடக்கு முறையால் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தாமல் அன்பினால் அரவணைத்து ஆட்கொள்வதே ஆசிரியப் பண்பாகும். பிள்ளைப் பருவம் எய்தி ஆரம்பக் கல்வி பெறப் பாடசாலை செல்லும் ஒரு மாணவன் தன் வீட்டுச்சூழலிலிருந்து அம்மா, அப்பா, சகோதர, சகோதரியர், செல்லப்பிராணிகள் யாவற்றையும் விட்டு அதாவது பார்த்துப் பழகிய முகங்களை விட்டு முற்றிலும் மாறுபட்ட தன்னைப்போன்ற வேறு பல மாணவர்களுடன் மாறுபட்ட சூழலில் ஓரளவு கட்டுப்பாட்டுள் அமைந்த தேச அடிப்படை


யில் செயற்பட வேண்டும். அதற்கேற்றபடி தன்னை ஆக்கிக் கொள்ளவேண்டும். அம் மாறுபட்ட சூழல் அவனுக்கு வெறுக்கத்தக்கதாக இருக்கக்கூடாது. ஆகவே அதற்கேற்ப கற்றல் நிலைக்கேற்ப அம்மாணவனைத் தயார் செய்வது பாலர்பாடசாலைகளாகும். திடீரெனப் பிள்ளையை மாறுபட்ட சூழலிற்கு விடாது முன்னரே 4—5 வயதில் பாலர் பாடசாலையில் அதற்கேற்ப அனுபவம் பெற்றுக்கொள்ள வேண்டும். எனவே இலங்கையில் ஆரம்பக்கல்வி வயதினைப் பொறுத்தவரை அவ்வயதிற்கு முன் பிள்ளைக்கு பாலர் கல்வி முக்கியமாகத் தேவைப்படுகிறது. பாலர் பாடசாலையில் அப்பிள்ளை பெறும் அனுபவங்களிலிருந்து தன்னைக் கற்றல் நிலைக்குத் தயார் செய்கின்றான்.

பாலர் கல்வி நிலையங்களில் காட்சிப் பொருட்கள் முக்கியமாக இருக்கவேண்டும். அவர்கள் வந்ததும் வராததுமாக எழுதவேண்டும், வாசிக்கவேண்டும் என நாம் கட்டாயப்படுத்தவும் கூடாது; எதிர்பார்க்கவும் கூடாது. அவர்கள் மொழித்திறனுக்கேற்ப கேட்டற்பயிற்சி, பேச்சுப்பயிற்சி (உச்சரிப்பு) எழுதுவதற்கு ஏற்றபடி தம் விரல்கள் கைகளுக்கேற்ற தசைநார்ப்பயிற்சி, தொடுபுலன் பயிற்சி, பாவனை செய்தல், மற்றவர்களுடன் சேர்ந்து பழகுதல், சமூக இசைவாக்கமுள்ளவர்களாதல், குழுக்களாகச் செயற்படல், சேர்ந்துபாடல், ஆடல், நற்பழக்கங்களைப் பழகிக் கொள்ளல் போன்ற இன்னோரன்ன பயிற்சிகள் மாத்திரம் பாலர்பாடசாலைகளில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ஆகவே ஊருக்கு ஊர் குறிச்சிகளுக்கு குறிச்சி ஒவ்வோர் பாலர்பாடசாலை இருப்பது கட்டாயமாகிறது. பெற்றோர் தம் குழந்தைப் பருவப் பிள்ளைகளை 4, 5 வயதுடையவர்களை பாலர்பாடசாலைகளில் அனுபவம் பெறச் சேர்த்தல் அதைவிட முக்கியமாகின்றது. இயற்கையின் படைப்பில் எல்லாம் நல்லனவாக அமைகின்றன. ஆனால் மனிதனின் தலையீட்டால் அவை மாசுபடுத்தப்படுகின்றன. அப்படி மாசுபடுத்தப்படாது நற்குடிமகனாக ஆக்கவேண்டிய கல்வியைப் பெற்றுச் சமுதாயமாக இயங்கி முழுமனிதனாக வாழவேண்டிய முதற்காரணியான பாலர்கல்வியைப் பெற பெற்றோரே உங்கள் பிள்ளைகளுக்கும் ஏற்ற வாய்ப்பளியுங்கள்.

**- பத்மா -**

## கல்வியில் கை வைத்தது அன்று
## கல்வி கற்கும் மாணவர்கள் உயிருக்கு உலைவைப்பது இன்று.



விபுல்! நீயா... சென்றுவிட்டாய்?
உன்உயிரையுமா பறித்துவிட்டார்கள்
உயிர் கொல்லிகள்.

மென்மையாகப் பேசும் உனக்கா
கொடுமையான இந்த மரணம்?
வெள்ளை உடையுடன்
இன்னும் இனியும் எங்கள்
இதயங்களில் நீ இருப்பாய்.
வெள்ளை மனம்தான் உனக்கு
பழகினேம் உன்னுடன் சிலநாட்கள்
தான்
ஆனல் எம் பாசம்மிகு தம்பியாக
ஆகிவிட்டாய்
கலை சிறிது தெரிந்தாலும் - தலைக்
கனம் பிடித்து வாழ்வோர் மத்தியில்
காலத்தின் தேவையுணர்ந்த
கலைஞஞக நீ இருந்தாய்
அமைதியாக உன் திறமைகள்
வெளிப்பட்டன.

'புதுக்கோலம் புரட்சிக் கோலம்
உன் கைவிரல்கள் காட்டும்'

இப்படித்தான் பலர் நினைப்பு
'நினைவுகள் நினைவாகவே
இருக்கட்டுமே
இப்படி நினைத்தா நீ பறந்தாய்?

அன்பான தம்பியே! பண்பான விபுலே!
உன் ஆத்மாவின் தாகம் தெரியும்
அதுதான் எமக்கும்.

தீர்ப்போம் தாகம் இது உறுதி அதை
பார்ப்பாய் வானில் நீ இருந்தே
உன் மரணம் எம் உறுதிக்கு உரம்
உன் ஆத்மா எங்கள் வசம்
மறக்கோம் நாம் விபுல்
உன்னை மட்டுமல்ல
உன் உயிரின் இலட்சியத்தையும் தான்.

# அர்ச்சனைப் பூக்களின் ஆசைகள்

செந்தமிழ் அன்னையிவள்
மண்ணடிமை நீக்க வேண்டும்
மறத்தமிழர் மனங் கொண்ட
மயக்க நிலை போக்க வேண்டும்
கண் ணதுவாம் நாட்டின்
குழந்தைகள் நன்று
குதூகலித்து இருக்க வேண்டும்
எண்ணமிது இரவுபகல்
வட்டமிட,

நாட்டநு கொண்டுளம்
வேட்டைக் களம் சென்று
வேட்டுகள் தீர்க்க நானும்
விரைந்திட்டேன விருப்புடன்

விரைந்து தான் என்ன பயன்?
விரைந்து தான் என்ன பயன
நடந்து போன பாதையில்
விரிந்து கிடந்த சகதியில்
வீழ்ந்திட்டேன் - தவறியல்ல.
சுதந்திரச் சகதியென்றால்
எட்டி அடி வைப்பதெங்கே?

புரண்டு புரண்டு எழுகின்றேன்
புரவியும் போகுமா இதனூடே?

ஆவிதனைக் கொடுத்து
ஜீவிக்கின்ற,
தியாக நட்சத்திரங்களைக் கண்டு
தொட்டுப் பார்த்தொரு சேதி
சொல்ல நினைத்தேன்.
ஆனாலும சன்னி எந்தன
நினைவுகள் நிறைவேறாக் கனவுகளே.
முக்கிளிக்கின்றேன் ஆனால்,

மூச்சு விடுகின்றேன்
ஏனென்றால்
சகதியிது மண்ணும் நீருமல்ல
குப்பையும கூழுமல்ல
கண்ணீரும் கட்டுப்பாடும்
ஆசைகளும் பாசங்களும்
சுயநலங்களும் சுரண்டல்களும்
அடக்குமுறைகளும் அதிகாரங்களும்
நிறைந்திட்ட அகழி

ஆனாலும் ஒன்று
கோட்டைத் தாண்டவும்
கோட்டை ஒழிக்கவும்
வேட்டைக் களம் சென்று
நாட்டைக் காக்கவும்
என்னொருத்தி ஆசையில்லை
இந்தச் சகதி என்ற
சமுதாயத்துள்ளே - பூத்திருக்கும்
எத்தனையோ பூக்களின்
ஆசையிது.
இத்தனை பூக்களும் - ஒன்று
கூடிச் சுவாசிக்கையில்
வீசும் வெம்மையால்
சுற்றியிருக்கும் சகதி
நிச்சயம் ஓர் நாள்
வற்றும்!
வறளும்!
பாளம் பாளமாய் வெடிக்கும்!
அப்போது அவற்றின் மீதும
அப்பாலும்
நடப்போம் நமது பாதையில்
இப்போது மட்டும் அரக்கனின்
காலடியில்
அர்ச்சிக்கப்பட்ட பூக்கள் நாம்.

—பல்லவி—

# எம் மக்களின் பார்வைக்கு - - - - -

— ஆர்த்தி —

சோசலிச தமிழீழத்தை நோக்கி நடைபோடும் தமிழீழ மக்களாகிய நாம் எம்மால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பல்வேறு பணிகளையும் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. தமிழீழ தளங்களிலே ஸ்ரீலங்கா இராணுவத்திற்கெதிரான எமது தரப்பு இராணுவ தயாரிப்பு வேலைகள் ஓரளவுக்கு முற்றுப் பெற்றுள்ளன. எனவே மக்களின் உடல் நலத்தைப் பாதிக்கும் பிற விடயங்களைப்பற்றி நாம் தற்போது சிந்திக்க வேண்டியது அவசியமாயுள்ளது. இந்த வகையிலேயே சுகாதார சீர்கேடுகள், மூட நம்பிக்கைகளினால் ஏற்படும் விபரீதங்கள் பற்றி நாம்அவதானமாக நடக்கவேண்டியுள்ளது.

மழைகாலங்களில் பிற வெள்ளம் கிணற்றினுள் நுழைவது சகஜம். இந் நீரை கொதிக்க வைத்து அருந்தாததினாலேயோ அல்லது குளோரீன் இடாது நீரை பாவிப்பதனாலோ குழந்தைகள் மட்டுமல்லாது பெரியோர் முதிர்ந்தோர் போன்றவர்களும் வயிற்றோட்டம் நோய்க்கு உள்ளாகின்றனர்கள். சாதாரண வயிற்றோட்டம் சில வேளைகளில் உயிராபத்தையும் உண்டுபண்ணக் கூடியதாக மாறிவிடுகின்றது. குழந்தைகளுக்கு வயிற்றோட்ட நோய் ஏற்படுவது ஆபத்தானதே. இந் நோயினால் குழந்தைகள் சோர்ந்திருக்கும் போது மூட நம்பிக்கைகளினாலோ அல்லது பதட்டத்தினாலோ நீராகாரம் கொடுக்கப்படுவதில்லை. எனவே நீரிழப்பு ஏற்பட்டு மரணத்திற்கு வித்திடுகின்றது. வயிற்றோட்டம் கூடுதலாக இருக்குமிடத்து நிச்சயமாக வைத்தியசாலைக்கு நோயாளியை கொண்டு சென்று சேலைன் ஏற்றுவது தவிர்க்க முடியாததாகின்றது. ஆரம்பத்திலேயே சுகாதார சீர்திருத்தம் மூலம் இந் நோய் ஏற்படுவதை தவிர்க்கலாம். அதை விடுத்து நோய் வந்த பின் வைத்தியசாலைகளிற்கு சென்று பொருளாதார நட்டத்தையும் மனித சக்தி நட்டத்தையும் ஏற்படுத்துவது வீணான செயலாகும். எத்தனையோ குடும்பங்கள் வைத்திய செலவிற்கான பொருளாதார வசதியற்றவை. இப்படியான குடும்பங்களில் இந் நோயினால் மரணம் நிச்சயிக்கப்படுகின்றது.

சின்னமுத்து ஏற்படும் போதும் அம்பாள் நோய் என்று சிகிச்சை செய்வதில்லை நம்பிக்கையில்லாமல் நாம் உயிர்வாழ முடியாது தான். ஆனால் அந்த நம்பிக்கையே தீவிரமாகும் போது அவை உயிரபாயமாக மாறுகின்றன. சின்னமுத்து நோய் ஏற்பட்டு சிகிச்சையின்மையால் நியூமோனியா ஏற்பட்டு 14சிறுர்கள் ஒரு கிராமத்திலேயே மரித்த சம்பவமும் நடந்ததுண்டு. இன அழிப்பிற்கு உட்பட்டு, சிங்கள அரசிற்கு சவாலாக வாழ்ந்து வரும் தமிழினம் குழந்தைகளின் மறைவு பேரிழப்

(10ம்பக்கம் பார்க்க)

# எம்மக்களின் இடர்தீர - - - - -

—சிவா—

இன்றைய காலகட்டத்தில் எப்பொழுதும் எமக்குக் கிடைக்கும் உணவுப் பொருட்களும் வாழ்க்கைப் பொருட்களும் தடைப் படுத்தப்படலாம். எம் போராட்டத்தைச் சீரழிக்க பட்டினி போட அரசு தயாராகி வருகிறது. அதற்கெல்லாம் பயந்து வாழ்வையும் குடும்பத்தையும் பாலைவனத்திற்கு இழுத்துச் செல்ல நாம் தயாரில்லை. முன்னைய காலத்தைப் போலல்ல இன்று எழுத்தறிவுடையோர் 83% வீதமாக உள்ளனர். இக்காலகட்டத்தின் குடும்ப அங்கத்தவர்கள் உலகமறிந்தவர்கள் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள விடுதலைப் போராட்ட வரலாற்றை அறிந்தவர்கள். இவ்வறிவுடைய தாய்மாரே இன்றைய சமூகத்தின் காரணியாகவுமுள்ளனர். அந்தத் தாயின் உறவில் மலர்ந்த குழந்தைகளின் புத்தி கூர்மையான நடவடிக்கைகள், காலத்திற் கேற்ற வகையிலான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அவர்களிடம் உண்டு என்பதை உணரவும் வைத்துள்ளது. எனவே இச்சுதந்திர போராட்ட பொற்காலத்திலே ஓர் வீடு குடும்பம் எவ்விதம் தன்னை ஒழுங்கு படுத்த வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

### உழைப்பைச் சிறப்புறப் பயன்படுத்தல் -

குடும்ப அங்கத்தவர்கள் உழைப்பு முழுமையாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். அதற்காக வீட்டில் ஒவ்வொரு தரத்தினருக்கும் ஏற்ற வகையில் வீட்டு வேலையைப் பங்கிடுதல் வேண்டும். நிலம் பண்படுத்தல் விறகு கொத்துதல் போன்றவற்றிற்கு பெரியோர்கள் தம் ஓய்வு நேரத்தின் ஒரு பகுதியினைச் செலவிடுதல் வேண்டும்.
மற்றும் ஆடு, மாடு, கோழி, தாரா போன்றவற்றை வளர்ப்பதற்கு பிள்ளைகள் தம் ஓய்வு நேரத்தின் ஒரு பகுதியைச் செலவிடுதல் வேண்டும். மற்றும் வீட்டுத்தோட்டம் காளான் போன்றவற்றை வளர்ப்பதில் குடும்பத்தவர்கள் எல்லோரும் ஒற்றுமையாகப் பாடுபடுவதோடு தாய் மிகக் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

### சேமிப்பு:-

பயிர்ச் செய்கை மூலமும் விலங்கினங்களை வளர்ப்பதனூடாகவும் வீட்டின் உற்பத்தி மட்டத்தை உயர்த்துவதால் நல்ல போஷாக்குள்ள உணவை குழந்தைகட்கும் பிள்ளைகட்கும் வழங்க முடிவதோடு தம் குடும்ப வருமானத்தில் பெரும் பகுதியை சேமிக்கவும் முடிகின்றது. இச் சேமிப்பு வேறு கைத்தொழில் உற்பத்திகளை மேற்கொள்வதற்கான முதலீடாகவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தேவையான குளிர்சாதனப் பெட்டி போன்றவற்றைக் கொள்வனவு செய்யவும் உதவியாக உள்ளது.

### ஒன்றுடன் இன்னொன்றிணைந்த உற்பத்தி:-

சென்ற காலங்களில் நாம் கவனம்செலுத்தாமல் விட்ட நன்னீர் மீன்வளர்ப்பு, பண்ணை முறையிலான கோழிவளர்ப்பு ஏனைய தேவைகளோடு தொடர்புபடுத்தப்பட்ட விலங்கின வளர்ப்பு திட்டமிட்ட வகையில் மேற்கொள்ள வேண்டியது இன்று அவசியமாகவுள்ளது. அதாவது மாடு வளர்ப்பு உயிர்வாயுவைப் பெறக்கூடிய வகையில் கட்டாயப் படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறே கோழி எச்சங்கள் மீன் வளர்ப்பிற்கு உதவுவதால் கோழிவளர்ப்பு கட்டாயமாக்

கப்படுதல். அவ்வாறே எல்லாவற்றின் கழிவு களையும் உணவாக்கும் பன்றி வளர்ப்பு திட்டமிட்ட வகையில் ஒழுங்கு படுத்தப்படுதல் வேண்டும். ஒன்று இன்னொன்றுக்கு உதவியாக இருக்கும் வகையில் வீட்டு உற்பத்திகள் தொடர்பு படுத்தப்படுதல் வேண்டும். இவ்வாறு பின்னிப் பிணைந்த உற்பத்தி முறையால் உற்பத்தி பெருகுவதோடு எம் சத்துணவின் அளவு அதிகரிக்கின்றது. ஏனைய வெளித்தொடர்புளிலிருந்து விடுபட முடிகின்றது. இலங்கை அரசு எமக்கு உணவை வழங்க வேண்டும். அதிலேயே நாம் தங்கியிருக்கின்றோம் என்ற நிலையிலிருந்து படிப்படியாக விடுதலை பெற நாம் இவ்வகையில் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும்.

### கழிவுப்பொருட்களிலிருந்தான உற்பத்தி:-

பொருட்கள் தேவைகள் மிக மிக அருமையாக இருக்கின்ற வேளையில் எதையும் விரயமாக்கக் கூடாது. வீண் பொழுது கழிப்பதே உழைப்பின் விரயத்திற்குச் சான்று. அவ்விதமே உணவுப் பண்டத் தயாரிப்பிலே கழிவுகளை எறிவது எமது திறமையின்மையையே காட்டும். ஒரு நிமிடம் தானும் கண்ணயராது காவல் காக்கும் இளம் போராளிகட்கும் எல்லாப் பொழுதுமே விடுதலைக்காக என்று எண்ணிச் செயற்படும் போராளிகட்கும் நாம் என்ன விதத்தில் உதவி செய்வோம், என்ன விதத்தில் அவர்களோடு நாம் ஒரு நிலையில் இருந்து சம்பாஷிக்க முடியுமா? நாம் அவர்களிற்கும் எம் இனத்திற்கும், எம் சமூகத்திற்கும், எம் இளம் சந்ததிக்குமாக சேர்த்து வைப்பதும் உரமாவதும் எமது திறமையான செயற்பாட்டிலேயே என்பதை குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் உணர வேண்டும்.

### உறவு:-

குடும்ப அங்கத்தினரிடையேயுள்ள உறவு வலுவடையவும், ஒரு குடும்பத்திற்கும், இன்னொரு குடும்பத்திற்கு மிடையிலான உறவு வலுவடையவும், வீட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் உதவும். பயிர்களிடத்தும் விலங்கின உயிர்களிடத்தும் நாம் கொள்ளும் உறவு வெறும் பயன் நோக்கில் மாத்திரம் இடம்பெறுவதில்லை. நாம் பூவை விரும்புவதில்லையா? பிறந்த ஆட்டுக்குட்டியை அணைப்பதில்லையா? வளரும் பயிரை வாழ்க்கையோடு நோக்குவதில்லையா? இவ்வளவும் மனித வாழ்விற்குத் தேவையானதே. இவற்றிடத்தில் நாம் கொள்ளும் நாட்டமும், அன்பும், பரிவும் எம் வாழ்வில் விரக்தியற்ற நிலையையே ஏற்படுத்துகின்றது. வீட்டில் ஆக்கமான காரியங்களைச் செய்வதால் பயிற்சியும், நல்லனுபவமும் கிடைப்பது நல்ல கல்வி அறிவாகவும் மாறிவிடுகிறது. இக்காரிய சித்தியில் ஒருவரையொருவர் வருத்துவதோ சுரண்டுவதோ இல்லாமல் மனித குலம் ஓர் இனம் என்ற அறிவையும் பெறமுடிகிறது. சொந்த முயற்சியில் முன்னோர் வாழ்ந்ததாலேயே அவர்கள் 100வயதுவரை வாழ்ந்தாகவும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்கள் குடும்பப் பிரச்சனையில்லாமல் நீண்டகாலம் வாழ்ந்ததற்கு அரசு ஆதரவு இல்லாமல் தம் சொந்தக் காலில் நின்றமையே அக்குடும்ப வாழ்வின் சிறப்பிற்கும் நீண்ட வாழ்க்கைக் காலத்திற்கும் காரணமாய் இருந்திருக்கின்றது என முன்னோர் கூறியதில் வியப்பில்லையே.

---

(8ம் பக்கத்தொடர்ச்சி)

பேயன்றி வேறில்லை. பிற்காலத்தில் சோசலிச சமுதாயத்தை கட்டியாளப் போகும் இளம் சமுதாயம் இப்படி பிஞ்சிலேயே வெம்பிப் போவது வேதனைக்குரியது. எனவே தமிழீழ மழலைகளை சுகாதாரப் பழக்கவழக்கம் மூலம் தவிர்க்கக் கூடிய நோய்களின்றும் பாதுகாத்து திறம்பட வளர்க்க வேண்டியது பெற்றோர் கையிலேயே தங்கியுள்ளது.

# பொறுத்திரு சோதரனே

—ராதை—

மா வேங்கை விக்டரே!
நீ மரித்த கணத்தில் கூட
உன் கரங்களில் கனன்ற சுதந்திர சுவாலையில்
பாசிசக் கூலிகள் பலர் பொசுக்கப்பட்டனர்
உன் கரங்களில் நீ ஏந்திய
துப்பாக்கியால்
நாளை தமிழீழம் நமதாகிட
வழி சமைத்தாய்

வீரப் புலியே! விக்டரே!
உன் உயிர் உடலிலிருக்கும் போதே
உயிரோடு பாசிச வெறியர்களை
பிடிக்கத் துடித்தாய் நீ
உன் அபிலாஷையை — அந்த
மரணம் ஒரு கணத்தில் வென்றுவிட்டது.

ஆனாலும்.........
உன்னுடல் தாயக மண்ணிலிருக்கும் போதே
பாசிச உடல்களும்
பரிதாபத்திற்குரிய கூலிகள் இருவரும்
உன்னருகில் தானிருந்தார்கள்
உயிருடனிருந்த இருவரும் — உண்மையில்
நடைப்பிணங்களே.

பூசாவிலும் வெலிக்கடையிலும்
சிங்கள வதைமுகாமிலும்
கடலிலும் கட்டாந்தரையிலும்
தம் தாய் நாடு ஒன்றை மட்டுமே
மூச்சாக சுவாசிக்கும்
எம் தன்மான இளைஞர்களுக்கு
உள்ள தீரமும் தியாகமும்
மரணத்தினை புறமுதுகிடும் பொய்யர்களுக்கு
புரியாத ஒன்றுதானே? — எனவே
அவர்கள் நடைப்பிணங்களேதான்

மக்களால் நேசிக்கப்படும் மாவீரனே!
உன் மரணம்............
எம் மனதை உருக்கவில்லை
இறுக்குகிறது

சுதந்திரம் ஒன்றுக்காக மட்டுமே
சமரில் முன்னின்று சாவிலும் முன்னின்றவனே
உனக்கு நாம் செய்யும் ஒரே அஞ்சலி
சோசலிச தமிழீழம் மட்டுமே.

அது வரை...........
பொறுத்திரு சோதரனே
எம் துப்பாக்கிகள் அரச கூலிகள்
சுட்டுப் பொசுக்கும்
அந்த சாம்பல் மேட்டிலே
சுதந்திரம் பூவாய் மலரும்.

அதுவரை .. பொறுத்திரு சோதரனே.

★

ஆடிப்பாடி விளையாடும் மழலைகள் இதயங்களில் அன்பை விதைப்போம் அன்னை பூமியில் பற்று வைக்கச் செய்வோம். இவர்கள் தான் எம் வருங்கால தேசத்தை வளம் கொழிக்க வைக்கப்போகும் சிருஷ்டிச் சிற்பிகள்.

# கூண்டுக் கிளிகளின் கூக்குரல்

சிறைவீடு
''சிந்தாமணி வாசா''
29- 08- 86

அடியே சசி!

நீ எழுதியிருந்தாய் ''கோழைத்தனமான முடிவெதற்கும் வந்துவிடாதே'' என்று.

நீ அவ்வாறு பயப்படாதே நான் இப்படிப்பட்ட கோழைத்தனமான முடிவெதையும் எடுக்க மாட்டேன். இது உறுதி!

ஆனாலும் இன்று நான் நரகத்தில் தான் வாழ்கிறேன், சிறைக்குள்தான் வேகுகிறேன்

நான்கு சுவருக்குள்தான் என் நடைபாதை,
பூட்டி வைத்த அறைக்குள்ளே
மாட்டி வைதத காத்தாடியால்
என் மூச்சின் வெம்மையைத் தணிக்க நினைக்கிறாள் என் தாய்!

எப்போதாவது சுதந்திரக் காற்றைச் சுகித்திருந்தால் தானே அதன் அருமை என்தாய்க்குத் தெரியும்.............?

பணமென்ற அரக்கனின பிடியில் அகப்பட்டிருக்கும்
அவளுகககெங்கே புரியப் போகிறது.
இனமொன்றழிகிறது இக்கட்டான வேளையிது
வீட்டுக்கொரு பிள்ளை போருக்குத் தேவையென்று
மது வென்ற பிசாசின் மடிமேல் துயில்கின்ற
தந்தைக் கென்ன புரியப் போகிறது
தமிழனின் கெதி என்னவென்று... ...............?
தோழி நான் சொல்கிறேன் கேள்!

இவர்கள் பகட்டுவாழ்வை விரும்புகிறார்கள் — யார்? எனது அருமைப் பெற்றோர்! வரட்டு கௌரவத்தை நேசிக்கிறார்கள. — இவர்கள் வாழ்கிற உலகம் வேறு, நான் வாழ விரும்பும் உலகம் வேறு...............

இதற்குமேல் எதுவும என்னால் எழுத முடியவில்லை- - -.- - -

தோழி! என்னை வெளியில் கொண்டுவர முடியுமா? என்னைப் போன்றவர்களை வெளியில் கொண்டுவர முடியுமா? நான் வெளியில் வரத்துடிக்கிறேன். விடுதலைவானில் விடிவை நோக்கிப் பறக்கத் துடிக்கிறேன்.

முடியுமா சொல்லேன்டி?

குறிப்பு;- இன்னொன்று சொல்ல மறந்துவிட்டேன். நான் கடைசித் தம்பியிடம் கடிதம் உனக்குக் கொடுத்து விடுவது எப்படியோ அம்மாவிற்குத் தெரிந்து விட்டது, இதனல் தம்பி கடுமையாகத் தண்டிக்கப்பட்டான்.

இப்படிக்கு
**பிரியமுள்ள தோழி இரதி**

மண்டபத்துள் படிப்பு மேசையின் முன் அமர்ந்திருந்த சசி கடிதத்தை மீண்டும் படித்தாள் முடிவில் "...முடியுமா சொல்லேன்டி...' என்று அவள் எழுதியிருந்ததைப் படித்தபோது சசியின் உள்மனம் ஏதோ பேசிககொண்டது. "கூண்டினைக் கொத்திக் குதறு, பிய்த்துப்போடு உனது உடலில் சக்தி இருக்கும்வரை அதனைச் செய்"

என நினைத்தவள் விழியை இமைக்குள் இடுக்கிச் சொருகிச் சிந்தித்தவாறே காகிதத்தை மடித்து மேசை விரிப்பின் கீழ் வைத்துவிட்டு எழுந்தாள்.

சாந்தியைச் சந்திக்க சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சசி பழைய நினைவுகளில் மூழ்கிப போனுள்.

எத்தனை பகல் அத்தனையும் பயனேடு பல கருமம் செய்தாள், பாலரோடு பாலராகப் பழகி அவர்கட்குப் பாடம் புகட்டினள். தாதியைப் போல் வருத்தாமல் தினம் மருத்துவமும் செய்தாள்; குருவி போலப் பறந்து கருத்துககளைப் பரப்பினுள், பங்காளிகளைக் கூட்டினுள் பல் துறையிலும் பாடுபட்டாள்; அத்தனை வேகத்தில் திரும்பியும் அடுக்களைக்குச் சென்று விட்டாள்.

நன்மனதோடு அவள் செய்த சேவைக்கு இறுதியில் அவள் பெற்ற பரிசுதான் என்ன?
அத்துமீறி ஆத்திரமடைந்த தாயின் அடி, குத்து, உதை. மாமல்லர் மாமனரின் அடி, உதை பண்பற்ற வார்த்தைகளால் வாசிக்கப்பட்ட பட்டங்கள்தான் என்னென்ன?

இத்தனையும் பார்த்து நின்ற தோழியரின் உள்ளம் வேதனையில் பொங்கி வெளிவந்த கண்ணீரும் அல்லலுற்ற அவள் அழுத கண்ணீரும் சேர்ந்து தான் என்ன செய்ய முடியும்! நினைவுகளில் மூழ்கியவாறு வீதி நடுவே சென்றுகொண்டிருந்த சசி முன்னல் கிடந்த ரோட் டுப்பள்ளத்தில் சைககிள குதித்து எழுந்தபோது சுயநினைவிற்கு வந்தவளாக தான் போக வேண்டிய இடத்திற்குத் திரும்பாமல் நேர்வழியில் சென்று கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

சரியான பாதைக்குத் திரும்பிய போது அக்காவென்று அழைத்தவாறு துர்க்காவும் வந்து வந்து சேர்ந்து கொண்டாள். ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டு சென்றபோது இடையில துர்க்கா கூறினுள்.

"அக்கா மாலினிக்குக் கல்யாணம் நடக்கப்போகுதாம்" ஓ! மாலினி என்னிடமும் சொன்னுள் தனக்குக் கல்யாணம் பேசுகிருர்களாம் பெற்ருேர் என்று கூறிய அக்கா தொடர்ந்தாள் "எனக்குக் கல்யாணம் விருப்பமில்லை" என்று அவள் சொல்லியும் கேட்காமல் பெற்ருேர் தங்கள் பாட்டிற்குப் பேசுகினமாம். "ஒரு நாளைக்கு எல்லாத்தையும் முற்ருக்கிப்போட்டு

வந்து இனி ஒரு இடமும் நீ வெளிக்கிடக் கூடாது என்று கதவை அடிச்சு மூடுவினம் என்று கூறி வருத்தப்பட்டாள் மாலினி என்றாள் அக்கா.

"சுதந்திரப் பறவைகளாகத் திரிந்த எங்களை இப்படிக் கால்கட்டும் கைக்கட்டும் போட்டு முடக்கி வைக்கப் பாக்கினம்" என்றும் கூறி வருத்தப்பட்டாள் தொடர்ந்து அக்கா

ஓமக்கா இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? என்றாள் துர்க்கா.

நீ ஏதாவது சொல்லேன — என்ன செய்யலாம்? என்று திருப்பிக் கேட்டாள் சசி யோசனையுடன் துர்க்காவை.

"இந்த முட்டுக்கட்டைகளை எப்படிப் போக்குவது" என்று வாய்விட்டு முணுமுணுத்த வாறு வண்டியை மிதித்துக்கொண்டிருந்தாள் துர்க்கா.

இதைக்கேட்ட சசி எவை முட்டுக்கட்டைகள் கல்யாணமா? என்றாள் கேள்விக்குறியோடு

ஓ வேறெயெதை என்றாள் கோபம் கலந்த துடுக்கோடு துர்க்கா.

நீ அப்போ கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லையா?

மாட்டன் என்றாள் துர்க்கா

அப்படியானால் நீங்கள் ஏன இன்னும் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. உங்களுக்கும் கன வயதுதானே என்றாள் வெளிப்படையாக. துர்க்காவின் துடுக்குத் தனமான வெளிப்ப டையான பேச்சைக் கேட்டபோது சசியால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

துர்க்கா கல்யாணம் என்பது ஒரு சடங்கு, முக்கியமான சடங்கு - இயற்கை ஆண் பெண் என்ற இரு இனத்தையும் படைத்துள்ளது. இந்த இரு இனத்தின் ஐக்கியத்தில்தான் குடும்ப வாழ்க்கை என்ற சக்கரம் சுழல ஆரம்பிக்கிறது - இந்த இரு இனங்களின் இணைவும் இயற்கை நடப்பின் நியதி - இதை உணர்ந்துதான் நம முன்னோர் இச்சடங்கை முக்கியப்படுத் தினர்.

ஆனாலும ஒவ்வொரு மனிதனும் சூழ்நிலை காரணமாகவும் வெவ்வேறுபட்ட கொள் கைகள், இலட்சியங்கள காரணமாகவு உரியவயதில் அச்சடங்கைச் செய்ய முடியாமல் போகின றது. - தவிர இயறகை நியதியை எதிர்ப்பதில் அர்த்தமில்லை. அப்படியொரு முடிவெடுத்தால் அது பைத்தியக்காரத்தனமானது - என்றாள் சசி

அப்படியானால் விடுதலைப் போராட்டத்தில் எங்களைப் போன்ற பெண்களின் பங்களிப் பென்பது தொடர்ச்சியாகக் கிடைக்காமத்தான் இருக்கமுடியும் - அவரவர் பாட்டிற்குக் கலயா ணத்தைக் கட்டிக்கொண்டு புருஷன பிள்ளை என்று தங்கள் தங்கள் பாட்டிற்கு சுயநல வாழ்க் கையைத் தொடரவேண்டியது தான் என்றாள் துர்க்கா ஆவேசமாக,

இல்லை நிச்சயமாகத் தொடர முடியும்! என்றாள் சசி.

எப்படி - என்றாள் துர்க்கா.

புருஷன் பிள்ளை என்று வந்துவிட்டால் போராட்டத்தில் பங்களிக்க முடியாது என்கிறாய் அப்படித்தானே.

துர்க்கா மௌனமாக இருந்தாள்.

மீண்டும் சசியே தொடர்ந்தாள்.

"இப்படித்தான் ரதியும் எழுதியிருந்தாள் தனக்கும் போராட்டத்தில் பங்களிக்காமல் இருக்க முடியவில்லை என்னை வெளியில் கொண்டுவரமுடியுமா" வென்று

ஆனால் அவளுக்குத் தெரியவில்லை. எமது உரிமை சிறிலங்கா அரசினால் மட்டுமல்ல எங்கள பெற்றோரால் - அதாவது இந்தச் சமுதாயத்தாலும் பறிக்கப்படுகின்றது; சிங்கள அரசின் ஒடுக்குமுறையை விடக் கொடூரமாக பல்லாண்டு காலமாக நம்மை வதைத்து வருவது இந்தச் சமூகம்தான் என்று.

இருந்தாலும் அவர் அவளையுமறியாமல் போராடிக் கொண்டு தான் இருக்கிறாள்.

ஏனென்றால் அவள் புரட்சிகரச் சிந்தனையுடையவள்; அவளது ஒவ்வொரு சொல்லும் செயலும் வீட்டில் போராட்டத்தையே ஏற்படுத்தும் ஏற்படுத்தியிருக்கிறது.

துர்க்கா இடைமறித்துக் கூறினாள்—நாங்கள் அவளைப் போராடுகிறாள் என்கிறோம் ஆனால் சமூகம் என்ன சொல்கிறது அடக்கமில்லாதவள், வாய்க்காரி, திமிர்பிடித்தவள் - - - - இப்படி எத்தனையோ — இவ்வாறு சமூகத்தால் இகழப்படுபவளின் எதிர்காலம் நாளை எப்படி அமையும் ?

எதிர்காலமா? அவளுக்கா? — இந்த மாபெரும் மக்கள் தொகை கொண்ட சமூகத்தை எதிர்த்துப் போராடப் புறப்பட்ட நங்கைக்கு ஓர் நல்ல எதிர்காலமா — அபூர்வம்! என்றாள் பெருமூச்சோடு சசி.

அவள் வாழ்க்கையே இனிப் போராட்டம் தான் அமைதிக்கும் அங்கே இடமில்லை, அழுகைக்கும் அங்கே முடிவில்லை ஆனாலும் அவள் கோழையில்லை என்று கூறிக் கொண்டு துர்க்காவின் முகத்தைப் பார்த்தாள் சசி

வேதனைக் கோடுகளும், எட்டாத ஏதோ ஒன்றைத்தேடுவதைப் போன்ற வியப்புக் கோடுகளும் பரவித்தென்பட்டது அவளின் குழந்தைமுகம்.

சிறிது தூரம் மௌனமாகச் சைக்கிளில் போய்க்கொண்டிருந்த துர்க்கா அப்படியானால் ரதியக்கா இப்போ வீட்டில் பிரச்சனையின்றித் தானே இருக்கிறா — விடுதலைக்குப் பங்களிப்புச் செய்யிற பொழுதுதானே பிரச்சனை வருகிறது என்றாள் துர்க்கா.

நீண்டநாட்களுக்கு அவ்வாறு அவளால் பங்களிப்புச் செய்யாமல் இருக்க முடியாது விடுதலையுணர்ச்சியும், சுதந்திரப்பற்றும் கொண்டவள் எனவே மீண்டும் எங்களோடு இணைந்து கொள்வாள் என்றாள் சசி

அப்படியானால் அவளின் அம்மாவும் மாமாவும் விடுவார்களா? அவர்கள் வழமை போல் தமது வாய்வல்லமையையும் கைவரிசையையும் காட்டுவார்கள், அவள் தன் நெஞ்சுரத்தைக் காட்டுவாள்.

—முற்றும்—

—நேரிழை—

## எடுப்போமே சபதம்

பொங்குது பொங்குது பொங்கலும் பொங்குது
தமிழர் இதயத்தில் வேதனை பொங் குது
வேதனை மீறியே ஆத்திரம் பொங் குது
ஆத்திரம் கொண்டநாம் எடுப்போமே சபதம்

சாதிக் கொடுமையை சாகடிப்போம்
சமத்துவத்தைப் பறை சாற்றிடுவோம்
சமதர்ம நெறியினை ஏற்றிடுவோம்
சகலரும் ஒன்றுக கூடிடுவோம்

இனவெறியும் தமிழினக் கொலையும்
இலங்கையின் இன்றைய இலட்சியமாம்
இரத்தம் குடிக்கும் இடும்பர்களை
இல்லை இனி என ஆக்கிடுவோம்

போதனை செய்வது பெண்ணின் பெருமை
சாதனை செய்வது பெண்ணடிமை கொள்ளலில்
வேதனை கொடுப்பது இந்த மடமை
இதனைக் கொய்வது எங்கள் கடமை

மீனவர் எமக்கோ கடலில் வதைப்பு
மலைநாட்டில் நமக்கோ அடக்கி வைப்பு
சிறுபான்மை நாமோ நாளும் மிதிப்பு
இத்துன்பம் போக்கவே போரில் குதிப்பு

-கிருபா-

## நாமும் நாளையும்

தண்ணீரில் நீந்துகின்ற
மீன்கள் நாம்
தாகத்திற்குத் வெந்நீரா
கேட்டு நிற்போம்.

மண்ணின் விடியலுக்காய்
வான் கிறப் புறப்பட்டோர்
சுதந்திரச் சூரியக் கதிராகி
விளைநிலத்தில் வீரம் விளைக்கின்றேம்.

சுண்ணக்கல் நடுகல்லாய்
நித்தியமும் செவ்வணக்கம்
பழக்கும் நாளைய சுதந்திர
தேவிக்கு கையெடுக்க; தலைசாய்க்க

மதுகரனின் மன்மதக் கரங்கள் தீண் டிய
தீட்டை நீக்க நீரில் அலர்பும் - கரங் கள்
கல்விப் பெருக்கால் சுரந்த தேனல்
அபிஷேகங்கள் செய்யலாமோ?

மலரின் இதழ்கள் சுடுவதுண்டு
மன்மத பாணம் இறைத்தலுமுண்டு
இரண்டும் வேறு வேறல்ல
நாளை புலரும் ஞால விழிப்புக்காக

-அநாமிகா-

★

# விழிக்க வைப்போம்

**மோகனா:-** என்ன கல்பனா உன்னைக் கனகாலமாய்க் காணேல்லை. நான் நினைச்சன் வெளிநாட்டுக்கு ஓடிவிட்டாயாக்கும் என்று.

**கல்பனா:-** சும்மா போ, உனக்கு நெடுகவும் பகிடிதான். இந்த வருஷம் A/L எடுக்கிறன். ஒரே ரியூசன் நேரமே இல்லை வெளியிலை வெளிக்கிடுறதுக்கு.

**மோகனா:-** ஏதோ படிப்பு, படிப்பு என்று சாகிறாய். அப்ப அடுத்த வருஷம் கம்பஸில் டொக்டருக்கு படிக்க என்றன்ஸ் கிடைக்கும் எண்டு சொல்லுகிறாய்.

**கல்பனா:-** சும்மா போடி, உனக்கு கிண்டலாய்இருக்கு எனக்கு சோதனையை நினைத்தால் ஒரே பயமாய் இருக்கு. அந்தக் கதையை விடு. இப்ப நீ என்னடி செய்கிறாய்? நல்லாய் மெலிந்து கறுத்துப் போனாய். இயக்கம் அப்பிடி இப்பிடி என்று திரிகிறாய் போலக் கிடக்குது.

**மோகனா:-** அப்படியெண்டு - - - - - -

**கல்பனா:-** எனக்கு விளங்குது, நீ உன்ரை வாயாலே சொல்லவேண்டிய அவசியமில்லை. சும்மா உதுகளையெல்லாம் விட்டுட்டு ஏதாவது கோஸ் *Follow* பண்ணினாலும் பரவாயில்லை. -நீ என்ன பெடியனே உதுகளுக்கெல்லாம் திரிய.

**மோகனா:-** ஏண்டி இப்பிடிச் சொல்லுறாய்? நீயும் தமிழ்ப் பெண்தானே! இந்தத் தமிழ் இனம் எத்தனை எத்தனை வழிகளால் அடக்கப்படுகிது, ஒடுக்கப்படுகிறது, வதைக்கப்படுகிறது-இந்த வதைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளுறதுக்காக எத்தனை ஆயிரம் இளைஞர்கள் யுவதிகள் தங்கள் உயிரைத் துச்சமாக மதித்து விடுதலைப் பணியில் இறங்கியிருக்கிறார்கள். எத்தனை நூற்றுக் கணக்கான போராளிகளும் மக்களும் தமது இன்னுயிரை ஈந்திருக்கிறார்கள்; அவர்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்வதில் நானென்றும் வெட்கப்படவில்லை, அளவிலாப் பெருமையும் மகிழ்ச்சியுமே அடைகின்றேன் தவிர போராட்டச் சிந்தனையின்றி, விடுதலைப் பணியில் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உள்ள பங்கை

உணராமல் சுயநலங்களோடு வாழ்பவரைப் பார்த்தே வெட்கப்படுகின்றேன்; அந்தக் கடமையைச் செய்யாதிருக்கும் கயமைத்தனத்தை எண்ணியே நாணுகின்றேன்.

**கல்பனா:-** மோகனா நீ சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். பிழையென்று சொல்லவில்லை; ஆனால் என்னை எடுத்துப் பார். நானொரு மாணவி எமது பெற்றோர் கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கி படிப்பதற்கு எவ்வளவோ தொகையான பணத்தைச் செலவழிக்கின்றார்கள் இதற்குக் காரணம் என்ன? பொம்பிளைப்பிள்ளைகள் படித்து நல்ல மாதிரியாக வாழவேண்டும் என்ற ஆசைதான். இவர்களின் ஆசைகளை இடித்துக் கொட்டி விட்டு போராட்டத்தில் இறங்கச் சொல்வது பெண்சமுதாயத்திற்கே அழகில்லை, முதலில் நாங்கள் பெற்றோருடைய ஆசையை நிறைவேற்ற வேண்டும். அதன் பின் சுற்றத்தாருடைய ஆசையை நிறைவேற்ற வேண்டும். அப்படி அப்படிப் படிப்படியாகத்தான் நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்ய வெளிக்கிட வேண்டும்.

**மோகனா:-** பொறு! பொறு! உந்தமாதிரி உன்ரை ஆசையை நிறைவேற்றி அப்பா அம்மாவின்ரை விருப்பத்தை நிறைவேற்றி சுற்றம் சூழலை மகிழ்விச்சுப் பிறகு நீ போராட்டத்தில் இறங்கிறதெண்டால் தலை நரைச்சாலும் உனக்கந்த சந்தர்ப்பம் கிடையாது. ஏனென்றால் ஆசை அளவில்லாதது ஒரு ஆசை நிறைவேறினால் அடுத்த ஆசை பிறக்கும் சங்கிலிக் கோர்வை போலத் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கும். உண்மையான ஒவ்வொரு மனிதனும் தமது ஆசைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்வதில்லை. தமது இலட்சியத்திற்காகவே வாழ்கிறார்கள். அதற்காகவே தமது உயிரையும் கொடுக்கிறார்கள். அப்படியே தான் எமது தமிழீழப் போராளிகளும். ஆனால் போராட்டமென்பது மட்டும் ஆண்களுக்கே உரியதல்ல; ஆயுதரீதியிலான போராட்டம் தான் போராட்டமும் அல்ல, அரசியல், சமூக பொருளாதார அபிவிருத்திரீதியில் நிறையப் பங்களிப்புச் செய்யமுடியும்.

**கல்பனா:-** இதைச் செய்வதற்குப் பெண்கள் தேவையென்றில்லையே!

**மோகனா:-** இன்று இருக்கும் இந்த ஏகாதிபத்திய முதலாளித்துவ சமுதாயத்தில் பெண்கள் எந்தெந்த வகைகளில் நிந்திக்கப்படுகிறார்கள் கீழ்த்தரமாக நடத்தப்படுகிறார்கள், அவர்கள் வாழ்க்கையை சீதனம் என்ற பணப்பேய் எந்தளவு தூரம் ஆட்டிப்படைக்கிறது அழித்தொழிக்கிறது. இது போன்ற பெண்களுக்கே உரித்தான

சில தனித்துவமான பிரச்சனைகள், இந்த சமுதாயத்தில் இருக்கிறதென்பதைப் புரிந்து கொள்ளவில்லையா நீ? இவற்றிலிருந்து பெண்கள் விடுபட வேண்டும் என்று எண்ணவில்லையா?

**கல்பனா:-** சீதனப்பிரச்சனையா - நமது சமுதாயத்தில் உள்ள முதுகெலும்பில்லாத ஆண்கள் இருக்கும் வரை இந்தப் பிரச்சனை தீராது

**மோகனா:-** ஒரு நிமிடம் நன்றாகச் சிந்தித்துப்பார் கல்பனா - சீதனம் என்ற பணமுதலை ஆண்கள் மட்டும் விரும்பிக் கேட்கவில்லை அதாவது மாப்பிள்ளை மட்டும் கேட்கவில்லை மாமியாரும் தான் கேட்கிறார் - பணக்கார வீட்டுப்பெண்ணுயின் பெண்வீட்டாரும் தான் மனமுவந்து சீதனம் கொடுக்கிறார்கள்; அப்படியிருக்க ஏன் ஆண் இனத்தை மட்டும் சாடுகிறாய்? இந்த சமுதாய அமைப்பு மாறவேண்டும் இந்த முதலாளித்துவ போட்டி சமுதாயத்தில் - பணத்தின் தேவை அதிகரித்துள்ளது, ஒவ்வொருவரும் பணக்காரராவதற்கு போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள் இங்கே மனிதாபிமானம்,அன்பு, பாசம், நேசம் இவற்றிற் கெல்லாம் மதிப்பில்லை. இவ்வாறு மனிதத் தன்மையை இழந்து கொண்டிருக்கும் இந்த சமுதாய அமைப்பு மாற்றப்பட வேண்டும். பொருளாதார ஏற்றத்தாழ்வற்ற முற்போக்கு சமதர்ம சமுதாயம் உருவாக்கப் பட வேண்டும் அத்தோடு பெண்கள் தமக்கே உரித்தான தனித்துவமான பிரச்சனைகளுக்குத் தாமே முகங்கொடுத்துப் போராட வேண்டும்.

**கல்பனா:-** புரிகிறது மோகனா அரசை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடுவதோடு இந்த சமுதாயத்தை எதிர்த்து நாங்கள் போராட வேண்டு மென்கிறாய் - படிப்பதற்காக நாம் சைக்கிளில் திரிவதற்கே இந்த சமுதாயம் எங்களை என்ன சொல்கிறது தெரியுமா? பிறகு விடுதலை இயக்கம் என்று வெளிக்கிட்டால் என்ன சொல்லும்? சொல்லியா தெரியவேண்டும் அப்படி வெளிக்கிட்டவர்களை சமுதாயம் என்ன கண்ணோட்டத்தில் பார்க்கிறது என்று உனக்குத் தெரியும் தானே.

**மோகனா:-** தெரியும்! வீட்டை விட்டு வெளியேறி - இவ்வாறு திடீர்ப்புரட்சியில் இறங்குபவர்கள் சமுதாயத்தால் தூக்கியெறியப்படுவது திண்ணம் - கண்கூடாகக் காணக் கூடியதாகவும் உள்ளது. எனவே தான் எதிலும் ஒரு படிப்படியான மாற்றம் பரிணும வளர்ச்சி தேவையென்பது - சமுதாயத்தோடு ஒன்றியிருந்து கொஞ்சம் கொஞ்சமாக படிப்படியான மாற்றத்தையே

நாம் கொண்டுவர முனைகிறோம்; அதற்கேற்றவாறு தான் போராடுகிறோம்.

**கல்பனா:-** அப்படிப் பார்த்தால் நானும் தான் இந்த சமுதாயத்தோடு போராடிக் கொண்டிருக்கிறேன்.

**மோகனா:-** உண்மை தான். இருந்தாலும் போராட்டம், திக்கற்ற போராட்டம், இலட்சிய நோக்கற்ற போராட்டம் பாதை வகுக்கப்படாத போராட்டம் பயனெதையும் விளைவிக்கும் என்று அல்ல ஒவ்வொரு பெண்ணினதும் போராட்ட உணர்வும் ஒட்டு மொத்த மாக ஒன்றிணைக்கப்படவேண்டும். கொள்கைப் பற்றும் இலட்சியமும் இருக்க வேண்டும். வெற்றியைப் பெறுவதற்கான சரியான பாதையை நாங்களே வகுத்துச் செல்ல வேண்டும். அப்போது தான் நமது போராட்டம் வெற்றியளிக்க முடியும்.

**கல்பனா:-** எனக்கு ரியூசனுக்கு நேரமாகுதடி. இப்பபோறன் பின்னேரத்தில் உன்னைச் சந்திக்கலாம் தானே. பின்னேரங்களிலே வாறன் படிச்சுக் கொண்டே பங்களிக்கலாம் தானே.

**மோகனா:-** ஓமோம் சந்திக்கலாம் வா.


## இது நடக்கும்

தார்மீகத்தை தொலைத்துவிட்ட
தம்மிஷ்ட அரசே
எங்கள் விழிகள் கக்கும்
ஆவேசச் சுவாலைகள்
அனலாய் உன் அதிகார வெறியை
சுட்டெரிக்கும்
எங்கள் மக்களின்
துயரப் பெருமூச்சுக்கள்
சுழல் காற்றாகி உன் கொலை வெறியை
குரூரத்தை
சுற்றிச் சுழன்று அழிக்கும்.

# வீரமே உங்கள் நாதமே



மன்னார் பிராந்திய தளபதி
**லெப். கேணல் விக்ரர்**
(மருசலின் பியூஸ்லஸ்)



மூதூர் பிராந்திய தளபதி
**மேஜர் கணேஸ்**
(சித்திரவேல் சிற்றம்பலம்)

விடுதலை கீதம் பாடத் துடித்த பறவைகள் இவை
தமிழீழ தேசிய கீதம் பாடுமுன்பே பறந்து விட்டன.
வீறு கொண்டுழைத்த வேங்கைகள் இவர்கள்.
விடுதலையை நேசித்த வீரர்கள் இவர்கள்.
பார் எங்கும் தமிழீழம் தனிநாட்டை
பிரகடனப்படுத்தத் துடித்த வீர மறவர்கள்.

''யார் விலகிப் போனாலும்
நாம் விலகிப் போகோம்.
எம் இலட்சியம் தமிழீழம்
அதற்காய்த்தான் நாம் உழைப்போம்''
என்றே சொன்னார்கள் இறுதிவரை போராடினார்கள்.
வாயாலே வீரம் பேசவில்லை இவர்கள்
செயலாலே தீரம் காட்டினார்கள்
மூண்டு விட இருந்த - அரசு
மூட்டி விட நினைத்த
முஸ்லிம் தமிழ் கலவரங்கள் இவர்கள்
விவேகத்தால் தீர்க்கப்பட்ட
நிகழ்வுகளும் நடந்ததுண்டு
அரசின் சதிவேலையை
அமைதியாய் அணுகி - இவர்கள்
திறமையாய் முறியடித்த
சம்பவங்களும் நிகழ்ந்ததுண்டு
விடுதலை வேங்கைகளே! வீரமறவர்களே!
விடிவினைக் காண திடமாய் உழைத்தீர்
முடிவினைக் காண்போம் என்றே நினைத்தீர்
விடியும் முன்பே பறந்தே சென்றீர்
உம் வழி எம்பணி தொடர்வோம்
உமதும் எமதும் தாகம்
அதுதான் தமிழீழ தாயகம்
அதனை அடைவோம் உறுதி
அதனில் நின்றே பிறழோம் நாமே

# தங்கைக்கோர் கடிதம்

அன்புத் தங்கைக்கு,

வீட்டிலுள்ளோரின் அடக்கு முறையை இனியும் பொறுக்க முடியாது என்று வீட்டை விட்டு வெளியேறத் துடித்துக் கொண்டிருக்கிறாய் என அறிந்தேன். 'பொறுமையாக இரு பொறுத்தார் பூமியாள்வார்' என்றெல்லாம் புத்தி சொல்லி உன் உணர்வுகளுக்கு தடை போடும் எண்ணம் எனக்கில்லை. ஆனால் அதேவேளை 'புறப்படு வீட்டை விட்டு, புரட்சிப் பெண்ணாய் நீ' என்று உன் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு வேடிக்கை பார்க்கவும் விரும்பவில்லை. விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் எமது நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் தம் தாய் நாட்டைக் காக்கும் கடமையுண்டு. அதில் ஆண் பெண் என்ற பேதமோ உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடோ, குழந்தைகள் முதியவர் என்ற வேற்றுமையோ இல்லை. எல்லோருக்கும் கடமை உண்டு. ஆனால் அந்தக கடமையை உணர்ந்து செயல்படுபவர்களின் தொகை இன்று குறைவாகவே உள்ளது. ஆனால் இப்படியே இருந்தால் எமது போராட்டம் இன்னும் நீண்டு கொண்டே தான் போகும். கள்ளம் கபடமின்றி இன்பதுன்பம் தெரியாமல் சிரித்துக் கொண்டிருக்கும் மழலைகளிடம் போராட்டத்தை கையளித்து அவர்களுக்கு துயரச் சுமைகளை ஏற்ற வேண்டுமா?

அன்றைக்கு எங்கள் முன்னோர்கள் விட்ட தவறினால் இளைஞர் சமுதாயத்திற்கு சுமை ஏற்றப்பட்டது. பொறுப்பு விடப்பட்டது. அதனால் தான் இன்று இறந்துகொண்டிருக்கின்ற, துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இளைய சமுதாயத்தினரின் தொகை அதிகமாக உள்ளது. அன்று எம் முன்னோர் விட்ட தவறை நாமும் செய்ய வேண்டாம். “த ” கடமையை உணராமல் இருந்துகொண்டு கடமையை உணர்ந்து போராட்டத்தில் பங்குபற்ற முயல்பவர்களை தடுத்து நிறுத்துகின்ற எந்த ஒருவரும் மன்னிக்கப்பட முடியாதவர்கள். இன்றைய மூத்தோர் அன்று தம் கடமையை உணர்ந்து செயல்பட்டிருந்தால் இன்று அவர்களோ, அவர்கள் பிள்ளைகளோ வேதனைகளை அனுபவிக்கவேண்டி வந்திருக்காது. தங்கள் கடமைகளை தாங்கள் தான் செய்யவில்லை. செய்யும் பிள்ளைகளை ஏன் தடுக்க வேண்டும்? உன் அம்மா அழுது அழுது உன் மனதைப் பலவீனப்படுத்துகின்றாள் என்றும் உன் அப்பா அடித்து அடித்து பயப்படுத்துகின்றார் என்றும் அறிந்தேன். உன் அம்மாவால் அதுதான் முடியும் ஏனென்றால் அவள் வளர்க்கப்பட்ட சூழல் அப்படி. அவள் தன் பிள்ளைப் பருவ காலத்திலோ இளம் பருவகாலத்திலோ நியாயத்தை எடுத்துச் சொல்லும் போது 'அடங்காப்பிடாரி' 'குடும்பத்துக்கு உதவாதவள்' என்றெல்லாம் ஏசி அவளை அடக்கியிருப்பார்கள். அதன் பின் அவள் நியாயத்தை எடுத்துக்காட்ட முன் வந்திருக்கமாட்டாள். இன்று நீ செய்வது பிழை இல்லை என்று தெரிந்தாலும் உனக்காக உன் தந்தையிடம் அவளால் வாதாட முடியாது. மீண்டும் அதே ஏச்சுக்கள்தான் அவளுக்குக் கிடைக்கும். நீ செய்வதை பிழை என நினைக்கும் உன் தந்தை உன் அம்மாவின் வளர்ப்பில்தான் குறை கூறுவர். இதற்கெல்லாம் பயந்துதான் உன் அம்மா அழுதழுது உன்னைத்தடுக்க முயல்கின்றாள். உன்னையோ உன் தந்தையையோ இந்த சமூகம் ஏசாது. உன் தாயைத்தான் ஏசும். அதற்காகத்தான் உன்தாய் பயப்படுகின்றாள்.

பெண் இரண்டாம் தரமாகக் கருதப்படும் இந்த ஆணாதிக்க சமூகத்தில் உன் அம்மாவின் நிலையில்தான் பல அம்மாமார் இருக்கிறார்கள். தாங்கள் எப்படி வளர்க்கப்பட்

டார்களோ அப்படித்தான் தங்கள் பெண் பிள்ளைகளையும் வளர்க்கிறார்கள். உன்னைப் போன்றவர்களும் அப்படிப்பட்ட தாய்மார்களால் வளர்க்கப்பட்டாலும் புரட்சிகரமாக சிந்திக்கத் தொடங்க புற உலக நடைமுறைகள், வெளியுலகத் தொடர்புகளினால் இடை இடையே சந்திக்கின்ற பிரச்சனைகள் போன்றன பல வாய்ப்புக்களை அளிக்கின்றன. எல்லோரும் அவற்றினால் பரந்தளவில் சிந்தனையை விரிவுபடுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. சிந்தனையை விரிவுபடுத்துபவர்கள் ஆக்கபூர்வமான வேலைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதை விடுத்து தம் சிந்தனையை குறுக்குவார்களேயானால் மீண்டும் மூடக் கொள்கைகளை பெருமளவில் தன்னகத்தே அடக்கியுள்ள சமூகத்தைத் தான் உருவாக்குவர். அப்படி ஓர் சமூகத்தைத் உருவாக்கவா நீ புறப்பட்டாய்? ஆரம்பத்தில் எல்லோருமே புரட்சிகரமாகச் சிந்திப்பார்கள் என்று எதிர்பார்ப்பது மடமைத்தனமானது. அப்படி நீ நினைப்பதால் தான் இப்படியான பிரச்சனைகளை எதிர்நோக்க முடியாமல் துவண்டு போகின்றாய். எங்கள் மண்ணை மீட்க வேண்டும்; அடிமைகளாக இனியும் வாழ முடியாது என்றெல்லாம் சிந்தித்து ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் சிலர்தான். எல்லோரும் தம் அடிமைத்தனத்தை உணர்ந்து விழித்துக் கொள்ளட்டும் என்று அந்த சிலர் எமது போராட்டத்தை ஆரம்பிக்காமல் இருந்திருந்தால் இன்றைக்கு இவ்வளவுக்கு எம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்குமா?

அன்று அவர்களும் பல பிரச்சனைகளை எதிர்நோக்கினார்கள் தான். அவர்களைப் பொறுத்தளவில் அன்று அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகள் மிகவும் கஷ்டமானவை தான். அதற்கெல்லாம் அவர்கள் மனம் தளர்ந்து விடவில்லை தம் கடமையை உணர்ந்து தம் பணியைத் தொடர்ந்தார்கள். ‘அவர்கள் ஆண்கள். பெரிதாக என்ன பிரச்சனைகள் அவர்களுக்கு எம்மைப்போல வந்திருக்கும்? பெண்களுக்குத்தானே சமூகத்தின் வசைகள் வீட்டாரின் ஏச்சுக்கள், அடி உதைகள் கிடைக்கும்’ என்று நீ முணுமுணுப்பாய். ஆனால் ஒருகணம் அன்றைய நிலையில் எமது இளைஞர்களை எண்ணிப்பார். அகிம்சை வழியில் எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அன்றைய அரசியல் வாதிகள் கூறி வந்த காலகட்டத்தில் ஆனால் எதுவுமே நடந்துவிடப் போவதில்லை என்று தெரிந்து கொண்டு அந்த உணர்வுகளில் வளர்ந்த தம் பெற்றோரை விட்டு வெகுதூரம் சென்று போராட்டத்திற்கான ஆயத்தங்களை அவர்கள் செய்யத் தொடங்கியிருப்பார்கள். எவரினதும் உதவியோ, ஆதரவோ கிடைக்காத வேளையில் தலைமறைவு வாழ்க்கை வாழும்போது எவ்வளவு கஷ்டத்தை அனுபவித்திருப்பார்கள். பிள்ளைகளின் செயல்கள் தெரிந்தபோது அவர்கள் பெற்றோர்கள் அந்த வேலைகளை விட்டு மகன் வராவிட்டால் தாம் தற்கொலை செய்வோம் என்று கூடச் சொல்லியிருப்பார்கள். ஆனால் எத்தனை இன்னல்கள் வந்தாலும் தாம் எடுத்த பணியைத் தொடர்வோம் என்ற உறுதியுடன் இருந்தார்கள். அப்படிப்பட்ட பயங்கர கஷ்டங்களையெல்லாம் அவர்கள் சமாளித்து தம்பணியைத் தொடர்ந்தது போல நாமும் எமது பணிகளைத் தொடரவேண்டும்.

பிற்போக்குத்தனமான பல அம்சங்களை தன்னுள்ளே உள்ளடக்கி வைத்திருக்கும் ஒரு சமூகத்தை சீர்திருத்தும் முயற்சியில் ஈடுபட விரும்பும் எந்த ஒரு பெண்ணும் கூடுமானவரை தன்வீட்டில் இருந்து கொண்டே சேவை செய்ய வேண்டும். இந்த சமூகத்தின் பிற்போக்குத் தனமான சட்டங்கள், சம்பிரதாயங்களுக்கு அடிபணிந்து கொண்டிருக்கும் வீட்டில் இருந்து கொண்டு வேலை செய்வது கஷ்டம் என்றே பலர் சொல்கிறார்கள் ஆனால் அதே வீட்டில் இருந்து கொண்டு சமுதாயப் பிரச்சனைகளுக்கு எதிராக போராட வேண்டும். பிரச்சனைகளிலிருந்து விலகிப்போய் தூர எங்கோ இருந்து கொண்டு அவற்றிற்கான தீர்வுக்காக போராட முடியாது. இன்றைக்கு எமது நாட்டில் எமது தமிழினம் விடு

தலை பெறவேண்டும் என்பதற்காக போராட்டம் நடந்து கொண்டு இருக்கிறது.

இந்தப் போராட்டத்தை விளங்கிக் கொள்ளாதவர்கள், அங்கிகரிக்காதவர்கள் என்று இருக்கும் பலர் கூறும் வசைகள், கேலிகள், எதிர்ப்புக்கள் போன்றவற்றை கண்டு பயந்து இந்த நாட்டை விட்டு ஓடி எங்கோ இருந்து கொண்டு போராளிகள் போராட வில்லையே. இதற்குள் இருந்து கொண்டு தான் போராட வேண்டும் என்ற உறுதியுடன் தான் போராடுகிறார்கள். அதனைப் போல் தான் நாமும் மூடத்தனமான கொள்கை களால் மூடப்பட்டு எங்கேயோ போய்க் கொண்டிருக்கும் இந்தச் சமூகத்தின் பிரச்சனை களை எதிர்கொண்டு போராட வேண்டுமேயல்லாமல் ஓடிவிடக்கூடாது.

இன்றைக்கு உன்வீட்டை வென்றெடுக்க வேண்டிய மனோபலம் உன்னிடம் இல்லை. வீட்டை விட்டுப் புறப்பட்டு எங்காவது போய் இருந்து கொண்டு வேலை செய் யப் போகின்றேன் என்கிறாய். அப்படிப்பட்ட நீ இந்த சமூகத்தால் இனியும் தொடர்ந்து ஏற்படப் போகும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் தொடர்ந்தும் ஓடிக் கொண்டே இருக்கப் போகின்றாயா? 'எனது நிலையில் நீங்கள் இருந்தால் இப்படியெல் லாம் போதிக்கமாட்டீர்கள்' என்று நீ முணுமுணுப்பாய் என்பது தெரியும். ஆனால் உண்மை இது தான். இது வெறும் போதனை அல்ல. இது தான் நிஜம் உனது நினைப்பு கானல்நீர் போன்றது. அந்தக் கானல் நீருக்காக ஓடி உன் இலட்சியத்திலிருந்து விலகி விடாதே. சொல்வதும் எழுதுவதும் சுலபம். ஆனால் நடைமுறையில் சாத்தியமே ஆகாதது என்றெல்லாம் நினைத்துப் புழுகுவாய். ஆனால் இந்தப் பாதை வழியே சென்றால் தான் நாம் சரியான இடத்தை அடைவோம். நீ நினைக்கும் பாதைவழி போனால் எங்கெல் லாமோ போய்க் களைத்து திரும்பவும் புறப்பட்ட இடத்துக்கே வந்து சேருவோம். எங்கள் போராட்டத்தை மேலும் முன்னெடுக்க வேண்டுமேயல்லாமல் பின் தள்ளப்படும் நிலைக்கு நாம் காரணியாக இருக்க வேண்டாமே.

நீ எதற்காக போராட வேண்டும் என்று புறப்பட்டாய்? எங்கள் சமுதாயத்தின் பிற்போக்குத் தனமான அம்சங்களை எல்லாம் உடைத்தெறிந்து புதுமையான, புரட்சிகர மான, சமத்துவம் பேணுகின்ற ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்ப நினைத்து உன் வேலையை ஆரம்பித்த நீ இன்று இப்படி மனம் தளர்ந்து நிற்கின்றாயே? "மடைமைக் கொள்கைகளைத் தகர்ப்போம். மலரும் தமிழீழத்தில் சமத்துவத்தை நிலவ வைக்க பாடு படுவோம்." என்றெல்லாம் அன்று ஆவேசமாகச் சொல்லும் போது மடைமைக் கொள் கைகளை விடாப்பிடியாக பற்றிப்பிடித்திருக்கும் எமது சமூகத்தால் பல பிரச்சனைகள் ஏற்படும். அதனையெல்லாம் எதிர்கொண்டு வெற்றி கொள்ளலாம் என்ற துணிவுடன் தானே சொன்னாய். இன்று இப்படி மனம் சோர்ந்து நிற்கின்றாயே. எமது வீட்டாருக்கு எமது போராட்டம் சம்பந்தமான தெளிவை ஊட்டமுடியாத எம்மால் எப்படி எங்கள் சமூகத்தை விழிக்க வைக்க முடியும். இப்படியான பிரச்சனைகளை எதிர்கொண்டு சமாளிக்கின்ற மனப்பக்குவத்தை நாம் அடைந்தால் தான் எம்மால் உறுதியாக நின்று விடுதலைக்காக உழைக்க முடியும்.

உன் அன்பு அக்கா
சாவித்திரி.

# என்றும் எங்களுள் ஜீவித்திருக்கும் கடமை மறவா விடுதலை வேங்கைக்கு - - - -

அன்புத்தாய் கரங்களில்
17- 03- 1959



பூமித்தாய் மடியில்
16- 12- 1986

தியாகம், நேர்மை, போலித்தனமே இல்லாத தன்மை, கடமை உணர்வு, ஒழுக்க வாழ்வு, கடின உழைப்பு, எளிமை என இவ்வாறான எல்லா நல்ல குணங்களுக்கும் உதாரணமாக ஒருவனைக் காட்டமுடியுமா எனக்கேட்டால் எவ்வித தயக்கமுமின்றி உடனே சுட்டிக் காட்டக் கூடிய ஓர் மனிதன் தான் தேவதாஸ்.

குருநகர், நாவாந்துறை உள்ளிட்ட பகுதிகளை பொறுப்பெடுத்த குறுகிய காலத்துள் அவன் செய்து விட்ட சாதனைகள் அளப்பரியவை. செய்ய நினைத்துக் கொண்டிருந்தவை அதை விட அதிகம். வறிய குடும்பத்து மகன் அவன். குடும்ப அங்கத்தவனாக மட்டும் தான் இருந்த வரை தந்தை இல்லாத தம் குடும்பத்தை மிகுந்த சிரமத்துடன் கொண்டு நடத்தி வந்த தாய்க்கு உதவியாக மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துக் கொண்டு அந்தக் கஷ்டங்கள் மத்தியிலும் கல்வியில் வறுமை அடைந்து விடக் கூடாது என்பதனால் தன் படிப்பைத் தொடர்ந்து பல்கலைக்கழக அனுமதியையும் பெற்றான். ஆனால் முழுமையாகவே நாட்டுப்பணியில் தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்று மனதில் உறுதி கொண்டு பல்கலைக்கழக படிப்பைத் தொடராமல் நாட்டுப்பணியைத் தொடர்ந்தான்.

மரணம் அந்த தூயமகனைத் தழுவும் வரை ஓய்வு என ஒன்று தனக்குத் தேவையில்லை என்று மக்களுக்காக, மக்கள் விடுதலைக்காகப் பாடுபட்டான். ஓய்வே இன்றி உழைத்த அந்த உறுதி மிகு வீரன் இன்று தன்னை நேசித்தவர்கள் மனங்களில் துயரங்களை சுமக்க வைத்து நிரந்தர ஓய்வு கொண்டு விட்டான். அவனின் ஆத்மாவோ தன்பணியைத் தொடர விரும்பும் என்பதை அவனை நேசித்தவர்கள், அவனை விளங்கிக் கொண்டவர்கள் புரிந்து கொள்வார்கள். தன் பணியைத் தொடர விரும்பும் அவனின் தூய ஆத்மா விடுதலைப் போராட்டத்தில் பங்களிப்புச் செய்து கொண்டிருக்கும் எல்லோருடனும் ஜீவித்துக் கொண்டிருக்கும். அவனை ஆழமாக நேசித்த அவன் உறவுகள், அவனோடு இணைந்து பணியாற்றி வந்த சகாக்கள் அவனின் திடீர்மரணத்தால் திகைப்புற்று துயரம் கொண்டு சோர்வடைந்து, நின்றாலும் அவனைப் புரிந்து கொண்டவர்கள்

அவன் நாட்டுப்பணியில் தளர்ச்சி அடைவதை விரும்பவே மாட்டான் என்பதை தெரிந்து வைத்திருப்பார்கள். ஆதலால் எதிர்பாராமல் நடந்து விட்ட அந்த வீர வேங்கையின் மரணத்தை ஜீரணிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் நாம் அவனுக்காகச் செய்ய வேண்டியது அவனின் இலட்சியத்தை நிறைவேற்றும் பணியில் உறுதியுடன் பணியாற்றுவதே ஆகும்.

★

மக்கள் விடுதலையே அன்றி
வேறொன்றை நினைத்திராத மானுடன் இவன்.

அவர் தம் துன்பம் களைந்திடவே
உறுதி பூண்டுழைத்த உயரிய மனிதன் இவன்.

கடின உழைப்பன்றி ஓய்வு இவன் கண்டதில்லை.

உண்மை நினைப்பன்றி பொய்மையை இவன் அறிந்ததில்லை

தியாகம் இவன் வாழ்வில் தொடர்ந்திட்ட நிகழ்வு தான்

தூய்மை இவன் வாழ்வில் நிறைந்திட்ட அம்சம் தான்

எம் கண்ணீர்ப் பூக்கள் இவன் கல்லறை நிறைக்கும்

எம் உறுதித் துடிப்புக்கள் இவன் இலட்சியப் பயணத்தை தொடரும்

எம் நேர்மை உழைப்பு இவன் ஆத்மாவை குளிரவைக்கும்

விடுதலைப் பாதையில் மக்களை அணி திரட்டி நாம் அழைத்துச் சென்றால்

இவன் வழி நாம் நடப்பதை உறுதிப்படுத்துவோம்

தளர்ச்சி எம்மிடத்தில் இருக்குமேயானல்

இவன் ஆத்மாவின் துயரப் பெருமூச்சே எம்மைத் தொடரும்

இவனை, இவன் நேசித்தவற்றை நேசித்தவர்கள் நாங்கள்

அதனல்,

எமதும், இவனதும் இலட்சியத்தை அடைய

இறுதி வரை உழைப்போம்.

★

## தளரவே மாட்டோம்

கனவுகளின் அத்திவாரத்தில்
எங்கள் இலட்சியம் கட்டி எழுப்பப் படவில்லை

அதனல்தான் தொடர்ந்திடும் மரணங்கள்

நிகழ்ந்திடும் சோக நிகழ்வுகள்

எங்களை தளர்ச்சியடையச் செய்யவில்லை.

# மரங்களைப் பாதுகாப்போம்

— லக்ஷ்மி —

எம் மத்தியில் இன்று எண்ணிலடங்காத மரங்கள் நிறைந்து காணப்படுகின்றது. இம் மரங்கள் சொல்லிலடங்காத தேவைகளுக்கு எமக்கு பயன்படுகின்றது. எனவே நாம் மரங்களைப் பாதுகாப்போம். ஸ்ரீலங்கா அரசாங்கம் இன்று திட்டமிட்டு தமிழ்பேசும் மக்கள் வாழுமிடங்களில் மக்களுக்கு எத்தனையோ தேவைகளையும், சேவைகளையும் பூர்த்தி செய்யும் மரங்களை அழித்து வருகின்றது. எனவே எம் அரிய வளத்தினை அழிவிலிருந்து பாதுகாப்போம்.

இன்று காடுகளில் காணப்படுகின்ற மரங்கள் பலவித தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடியனவாக காணப்படுகின்றன. ஆனால் அம் மரங்கள் பலவித தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அம்மர இனங்கள் பாகுபடுத்தப்படுவதில்லை. பரந்த ஒரே நோக்கில் உதாரணமாக வீட்டுத் தேவை என எடுத்துக் கொண்டால் அவ் விறகுத் தேவையை நோக்கமாகக் கொண்டு அவ் முழு இன மரங்களும் அழிக்கப்படுகின்றன. இவ்வாறு முழு இன மரங்களும் ஒரு சேவை நோக்குடன் அழிக்கப்படுவதனுல் ஏனைய தேவைகளுக்கு பயன்படும் மரங்களின் பலனை அருகும் நிலை ஏற்படுகின்றது. எனவே நாம் மரத்தினை தேவைகளுக்கு இணங்க பிரித்து அவற்றினை இனங்கண்டு அதற்கிணங்க எம் தேவைகளைப் பூர்த்தி செய்வோம்.

காடுகள் அழிக்கப்படுவதனுல் விலங்கு இனங்கள் அருகிக் கொண்டு போகின்றது. அத்துடன் சீரான மழையின்மை, மண்ணரிப்பு, வறட்சி என்பன நிலவுகின்றன. எனவே நாம் எமது தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மரங்களை அழிக்கும் போது அழிக்கும் மர இனங்களை அழிந்து விடாமலும் விலங்குஇனங்கள் அழிந்துவிடாமலும் பாதுகாக்க அழிக்கும் அவ்வின மரங்களை உருவாக்கி அதனை விருத்தி செய்வோம்

எமது சூழலில் எத்தனையோ மரங்கள் பயனுடையனவாக இருக்கின்றன எனவே இம்மரங்களின் பயன்களை அறிந்து அவற்றினை வீட்டில் நாட்டி அதிலிருந்து பயன்களைப் பெறுவோம். இன்று வீட்டில் நட்டு அதிலிருந்து பயன்பெறக்கூடிய மரங்களாக தவசிமுருங்கை, வாதனுராணி, இப்பிலிப்பில் முருங்கை, பெரிய ஆத்தி, சிற்றுத்தி, முல்லை முடக்கொத்தான், மொசுமொசுட்டை முசுட்டை போன்றன விளங்குகின்றன. இம் மரங்களில் இருந்து பெறப்படும் இலைகளில் அதிகளவு சத்துக்கள் காணப்படுகின்றன. எமது பொருளாதார பிரச்சனை ஓரளவிற்கு தீர்த்துக் கொள்வதற்கு குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெற்றுக்கொள்ள இலகுவான வழிகளைக் கையாளுவோம்

மேலும் இன்று எம் மத்தியில் எத்தனையோ பொதுமக்களும் போராளிகளும் துரதிஷ்டவசமாக இறக்கின்றுர்கள். போராட்டச் சூழ்நிலையில் இறப்பு என்பது சகஜம். ஆனுல் அவ்விறப்புக்கள் ஏன் நிகழ்ந்தன? எதற்காக நிகழ்ந்தன? எவ்வாறு நிகழ்ந்தன? என்பது பற்றி ஏனைய பொதுமக்களுக்கோ போராளிகளுக்கோ தெரியப்படுத்தப்பட வேண்டிய ஒன்றுகும். இந்நிலையில் இவ்விறப்புக்களை ஏனையோருக்கு தெரியப்படுத்துவதற்காக தெருவெங்கும் தோரணங்கள் கட்டப்படுகின்றது. கறுப்புத் துணிகள் கட்டப்படுகின்றன. பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றது. ஒலிபெருக்கியில் சிலவேளைகளில் அறிவிக்கப்படுகின்றது. இதற்கு மேலாக சந்திகளில் பனை, தென்னை, பப்பாசி, கமுகு, வாழை என பல இனமரங்கள் உடன் தறிக்

கப்பட்டு, கட்டப்படுகின்றது.

சந்திகளில் மரங்கள் கட்டப்படுவதனுல் வாகனங்கள் போக்குவரத்து செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் மரங்களை சந்திகளில் நடுவதனுல் வாகன போக்குவரத்து கஷ்டத்தினுல் இன்ஞெரு பொதுமகனே அன்றி போராளியோ இறக்க நேரிடலாம்.

இம் மர இனங்கள் அழிக்கப்பட்டு சந்திகளில் கட்டப்படுவது என்பது ஓர் தேவையற்ற செயலாகும். ஓர் மரத்தை வளர்ப்பதற்கு எவ்வளவோ காலங்கள் எடுக்கின்றன. இந்நிலையில் ஓர் போராளி இறந்தவுடனே அன்றி ஓர் பொதுமகன் இறந்தவுடனே மரங்கள் அரைநொடிப் பொழுதில் அழிக்கப்படுவது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்ருகும். ஒரு போராளி இறந்தவுடன் அவனுடைய துக்கதினத்தை அனுஷ்டிப்பதற்கு மரம் அழிக்கப்படுகின்றது. இதனை மறுபக்கம் திருப்பிப் பார்க்கும்போது அவன் இறந்தவுடன் அவனுடன் மரத்தின் உயிரும் இந்தப் பூமியில் இருக்கக் கூடாது எல்லாமே அவனுடன் அழிந்து போக வேண்டும் என்ற கருத்தை கொண்டு வருகின்றது. எனவே போராட்ட வேளையில் இறக்கின்ற ஒவ்வொரு போராளியினதும் சரித்திரங்கள் எமது வரலாற்றில் எழுதப்பட வேண்டுமாயின் நாம் இறக்கின்ற ஒவ்வொரு போராளிகளின் சரித்திரத்தையும் எமது வரலாற்றில் படைக்க நாம் அவர்களின் நினைவாக மரங்களை அழிக்காது புதிய மரங்களை உருவாக்கி அவர்கள் எம் மண்ணில் எம் இனத்திற்காக செய்த தியாகங்களை அழிந்து விடாது மரங்களை நடுவதன் மூலம் பாதுகாப்போம்.

இவ்வாறு நாம் மரங்களை நடுவதன் மூலம் போராளிகளையும் அவர்களின் வீரச் செயல்களை நினைவு கொள்வதுடன் எமது மர வளத்தினையும் பாதுகாத்துக் கொள்வோம்.

★

## திருந்தியவர்கள் இணையட்டும்

திசைமாறிய பறவைகள் இவர்கள்
திருத்தப்படக் கூடியவர்கள்
வசைகூறி மீண்டும் பாதை மாறினுல்
இவர்கள் மன்னிக்கப்பட முடியாதவர்
கள்
திருந்தியவர்கள் இணைந்து வரட்டும்
முடியாதவர்கள் பாதையை விட்டு
விலகட்டும்
பாதையைத் தடை செய்தால்
பயனை அனுபவிக்கத்தானே வேண்டும்.
திசை மாறியவர்களால்
பாதையில் குழப்பங்களை விளைவிக்கமுடியும்
ஆனுல் பாதையையே மாற்றிவிட
முடியாது.

# தமிழீழத்தின் வடக்கிலிருந்து கிழக்கை நோக்கும் ஒரு சிட்டுக்குருவியின் மனக்கசிவுகள்

‘‘இஸ்ரேலியர்கள் சர்வதேசிய ஊத்தைகள்’’ இது இன்றைய சிறிலங்காவின் இனவாத அமைச்சர் ஒருவரின் அன்றைய பேச்சு. ஆயினும் இன்று அதே அமைச்சரும் அவரின் நாட்டுத் தலைவரும் அவசரம் அவசரமாக ஒரு யூதவாதியை வரவேற்று முட்டையப்பமும் கிரிபத்தும் சாப்பிடுகிறார்கள் என்றால் சிறிலங்கா இனவாத அரசு அதே சர்வதேச ஊத்தைகளின் அணியில் அடுக்கிவைக்கப்பட்டுள்ளது என்பதை எவருமே மறுக்கமுடியாது.

தமிழீழப் போராளிகளின் செங்குருதியை உருசிபார்க்கும் ஓநாயின் கூட்டமாக இன்று மொசாட்படை இலங்கையின் தமிழீழமெங்கும் முடங்கிக் கிடக்கும் இராணுவ மினி முகாம்களில் சேவைக்கு வந்துள்ளனர்.

ஸியோனிச இஸ்ரேலின் இனவாத சித்தாந்தமே பாலஸ்தீனியரை நாடற்ற ஓடோடிகளாக்கியது. அதைப் பின்பற்றும் சிங்கள இனவாதிகளின் கோட்பாடுகளும் இலங்கையின் குடிமக்களாக இருக்கும் தமிழர்களையும் தமிழ்பேசும் இஸ்லாமியர்களையும், பாலஸ்தீனியர்களின் நிலைக்கே கொண்டு போக உள்ளது என்பதை இன்னும் உணராது இருக்கின்றனர். எம்போன்ற முஸ்லிம் மக்கள் தேசிய சிறுபான்மை மக்களாகிய தமிழர்களை முதலிலும் பின்னர் தமிழ்பேசும் இஸ்லாமியர்களையும் ஒழித்துக் கட்டுவது தான் சிங்கள இனவாதங்களின் மகுடி ஓசை என்பது இன்னும் நம் முஸ்லிம் மக்களுக்கு புரியாதிருக்கின்றது. — இன்று தமிழீழத்தில் நடப்பது தமிழீழப் போராட்டமல்ல. ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்ச்சிமிக்க விடுதலைப் போராட்டம், தமிழீழ விடுதலைப் புலிகள் இவ் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்போது தமிழ் பேசும் இஸ்லாமியர்கள் வெறுமனே பார்வையாளர்களாகநின்று கொள்வதில் நியாயமில்லை. -யூத சயோனிஸ்டுகளால் பயிற்றப்படும் இனவாத அரசுப் படைகளுக்கும் அதன் சையோனிஸ பயிற்சியாளர்களுக்கும் இத் தமிழீழம் பிணக்குழிகளைத்தான் அமைத்துக் கொடுக்கும் என்பதை அரசு உணருகின்றது. போராளிகளின் போராட்டங்களை எதிர்கொள்ள முடியாது அரசு ஓலமிட்டுக்கொண்டு உதவி கேட்கிறது. எனினும் இன்னும் ஏன் நமது இஸ்லாமியர்கள் ஒதுங்கி நிற்க வேண்டும் என்பது புரியவில்லையே, தமிழீழப் போராளிகளின் விடுதலை வேட்கையை எந்த ஒரு அடக்குமுறைச் சக்தியாலும் இனிமேல் ஒடுக்கிவிட முடியாது என்பதே உண்மையான இன்றைய வரலாறு. ‘‘புலிகள் என மக்களால் அன்புடன் அழைக்கப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அமைப்பு ரீதியாகவும் செயற்பட்டு கடந்த பதினான்கு வருடங்களாகி விட்டன. இது ஒரு எளிமையான இளைஞர் அமைப்பு என ஆரம்பித்து இன்று தமிழீழ மக்களின் பெருமதிப்பிற்குரிய கட்டுப்பாடான கொரில்லாப்படை அணி எனக் கருதும் அளவுக்கு வளர்ந்துள்ளது. இந்நிலையிலும் தமிழ் பேசும் இஸ்லாமிய இளைஞர்களின் பங்களிப்பு என்ன என்பது நாம் யோசிக்க வேண்டாமா.

1961ம் ஆண்டு சமஷ்டிக் கோரிக்கையை வைத்து சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. அரச நிர்வாகத்துக்குரிய யாழ். கச்சேரி வேலைகள் ஆட்டம் கண்டது இந்நிகழ்ச்சி மக்கள் மத்தியில் சமஷ்டிக் கட்சியை கூர்மை அடையச் செய்து கூட்டணி என்னும் ஒரு அமைப்பை மக்கள் தமது அரசியல் கட்சியாகக் கருதும் நிலையேற்பட்டது.

தமிழீழ வடக்கில் வசியும் இஸ்லாமியர்

கள் வெளிப்படையாக தம்மை கட்சி அரசியலில் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. சிறிமாவோ அம்மையாரினது கட்சியோ அல்லது தர்மிஸ்டர் ஜெயவர்த்தனேயின் கட்சியோ சிறுபான்மை இன மக்களின் அழிவுக்குத் திட்டம்போட்டு நாட்டை ஆட்சிப் படுத்தினர்களே தவிர அவர்களை மொழி, இன அடிப்படையில் வேறுபடுத்தியே கணித்தார்கள். இது தான் இந்த நாட்டில் நடைபெற்ற இனக் கலவரங்களின் போது மேடையேற்றப்பட்ட உண்மைகள். கட்சியடிப்படையில் மக்களும் சரி இளைஞர்களும் சரி ஏமாற்றப்பட்ட நிலையில்தான் இன்றைய போராட்ட நிலை உருப்பெற்று இளைஞர்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட இளைஞர் அமைப்புக்கள் மக்கள் மத்தியில் செயற்படத் தொடங்கின என்பதும் உண்மையே தமிழீழத் தனியரசே பாதுகாப்பானது என்பது இன்றைய இளைஞர்களின் போராட்ட வரலாற்றில் பரிணமம் பெற்று விசுவரூபமடைந்து தமிழீழ விடுதலைப் புலியின் அமைப்புக்கள் தமது அரசியற் கோட்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுவிட்டன. இதனல் உருப்படியற்ற அரசுகளின் பேச்சுவார்த்தைகளினல் அதிகம் எதிர்பார்க்க முடியாதுள்ளது என்பதை தமிழ் பேசும் இஸ்லாமியர்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டிய நிலைக்கு வந்துவிட்டனர். ஆங்கில ஆட்சியானது இம்மண்ணில் தூவி விட்டுச் சென்றுள்ள பிரித்தாளும் கொள்கையானது தனிச் சிங்கள இனவாதிகளுக்குத் தான் பிரயோசனப்படும். அது சிறுபான்மை மக்களுக்கு தீராத துன்பத்தையே ஏற்படுத்திக் கொண்டிருக்கும்.

1948ல் வெள்ளை ஆட்சி போக சிங்கள இனவாட்சி தலைதூக்கிய நாள் தொடக்கம் முஸ்லிம் மக்களின் கையில் இருந்த வணிகத்துறை சிங்கள முதலாளிமார்களின் கைக்கு மாறியது. சிங்கள முதலாளிகள் ஆட்சி மன்றத்துக்கு வந்தபின் ஏற்றுமதி இறக்குமதித் துறையில் இஸ்லாமியர்களின் கையிலிருந்து அரசுடைமை என்னும் போர்வையில் சிங்கள இனவாதிகளின் கைக்கு மாறியது. ஏறக்குறைய 68வீதம் அரசுடமையாகியது மொத்த அளவில் இஸ்லாமியர்களின் கையில் இரண்டரை வீதமான வர்த்தகமே உள்ளது என்பது நன்கு புலப்படும். சமீபத்திய பெங்களூர் பேச்சுவார்த்தையின் போது வெளியுலகுக்குக் காட்டுவதற்காக முஸ்லிம் மக்களுக்கு ஏதோ ஒரு மாகாணசுயாட்சி கொடுக்கின்றுர்களாம்என கூறப்பட்டது. இது முழுக்க முழுக்க அப்பட்டமான குழிபறிப்பு என்பதை முஸ்லிம்கள் உணரவேண்டும். அதுவும் அம்பாறைமாவட்டத்தில் இந்த முஸ்லிம் மாகாணம் அமையுமாம் என்பது சிரிப்புக்கிடமான யோசனை இப்பேச்சுக்களினல் இன்னெரு பாலஸ்தீனத்தை அம்பாறையில் உருவாக்க சிங்கள அரசுக்கு மொசாட் உதவியுள்ளது. தீக்கவாபியாவிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு பௌத்த சின்னங்கள் புதைக்கப்பட்டு பின்னர் புதைபொருளாக வெளிக்காட்டி சிங்கள இனவாதம் நிலப்பறிப்புச் செய்தது. இதனை முஸ்லிம்கள் மறக்கக்கூடாது.

அம்பாறையில் மட்டுமா? கிழக்கு மாகாணத்தில் இன்று சிங்களவர் வாழும் இடங்களை சற்றுப் பாருங்கள். இவையெல்லாம் அபிவிருத்தியென்ற போர்வையில் அரசுடமையாக்கிச் சிங்களவர்களை குடியேற்றி முஸ்லிம்களின் காணிகளில் கச்சேரிகள் மூலம் குடியேற்றப்பட்ட சில இஸ்லாமியர்களும் அங்கிருந்து பாலஸ்தீனப் பாணியில் சிங்கள இனவாதிகளினல் அடித்து விரட்டப்பட்டனர். முஸ்லிம்களுக்கு அவை பாதுகாப்பான இடமல்ல என அரசும் அதனுடைய ஹெலமற் அமைச்சர்களின் எக்கச்சக்கமாக உரைகளும் உதவின. ஆனல் உண்மை என்ன? இஸ்லாமியத் தமிழர்களின் காணிகளில் சிங்களக் குடியேற்றம். இதைத்தான் அனுகம்பே உல்பியன், வனஎல போன்ற முஸ்லிம்களின் சாணிகளிலிருந்து விரட்டப்பட்ட இஸ்லாமியரின் சரித்திரம் எனலாம். இவ்வகையான காணிப் பறிப்புகள் யாவும் ஸியோனிச இஸ்ரேலியர்களின் பாலஸ்தீனப் பணியில் நடந்திருப்பது சிங்கள இனவாதியும் ஒரு யூத மூளைதான் என்பதை முஸ்லிம்கள் ஒருபோ

தும் மறந்துவிட முடியாது எனலாம். காஸாப் பகுதியோ ஜோர்டான் மேற்குக் கரைப்பகுதியோ மட்டும் முஸ்லிம்களிடமிருந்து பறிபோகவில்லை. ஸியோனிச அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தரகர்கள் பயிற்சி கொடுக்கும் சிறிலங்காவிலும் அம்பலமோயா புன்னைக்குடா, பதவியா, கந்தளாய் ஆகிய ஒரு சில இடங்களில் பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழ்பேசிய இஸ்லாமியர்கள் இன்று அங்கு இல்லையே! இதையாவது முஸ்லிம் மக்கள் உணரக்கூடாதபடி பசப்புக்களை அரச அடிவொற்றிகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். ஆனால் உண்மை என்றோ ஒருநாள் வெடிககத்தான் போகிறது. அப்போதுதான் இஸ்லாமிய இளைஞர்களின் எழுச்சிக்குள் அகப்படுவார்கள் என்பதை தமிழ்பேசும் இஸ்லாமிய இளசுகள் உணரவேண்டும். அதற்கான பயிற்சிப் பாசறையை இன்றுள்ள விடுதலைப் போராளிகளிடமிருந்து கற்றுக் கொள்ள முன்வரவேண்டும். களப்பயிற்சி யில்லாதவன் களம்காண முடியாது. அவனால் சமுதாயமும் வளம் காணமுடியாது.

இஸ்லாமிய இளைஞனே உனது வருங்கால சந்ததியின் நிலையை சற்று யோசித்துப் பார். விகிதாசாரத் தேர்தல் முறையினால் உன் வலிமையை உடைத்தெறியும் கோடரியை சிங்கள இனவாதம் ஏற்படுத்திவிட்டது. "மது வாக்குப்பலம் வெறும் வெற்றுத்தோட்டா என்பதை நீ உணரவேண்டும் உன்னிடம் இருந்து பறிக்கப்பட்ட உன் மண்ணில் குடியேற்றப்படும் சிங்கள இனவாதிகள் உன்னை அழித்துக்கட்டுவதற்கு பயிற்சி கொடுக்கப்பட்டு ஆயுதபாணியாக வந்துள்ள உனது எதிரியாகிய இஸ்ரேலின் ஸியோனிசப்படையினால் உருவாக்கப்பட்ட காடையர் கூட்டம்என்பதை உணரவேண்டும். இந்நிலையில் நீ காணவேண்டியது தமிழீழ தாயகம் மட்டுமே அன்றி எதுவுமே செய்யாராகிய சேயார் அவர்களின் ஆட்சியல்ல. அல்லது அவ்வாட்சியின் சலுகைகளும் அல்ல. தமிழீழ தாயகமே உனக்கும் உன் சந்ததிக்கும் மிகவும் பாதுகாப்பானது என்பதை உணர்ந்து விடுதலைப் போராட்டத்தில் ஒதுங்காது விடுதலைப் புலிகளுடன் உன்னையும் ஒட்டிக் கொள். உன் வருங்கால சந்ததியின் விடிவுக்கு உனக்குள்ள ஒரு திறவுகோல் - - - -

★

சமூகத்தின் பார்வையில் நல்லவையும் தவறாகத் தெரிவதுண்டு. தீயவையும் பிழையாகத் தெரிவதுண்டு. ஆனால் இரண்டையும் பிழையாகத் தானே சமூகம் கூறுகின்றது என்ற அலட்சியத்தில் தவறுகள் தொடர்ந்து செய்வது எம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்கு சரி

---

ஒழுக்கமில்லாதவனாக நீண்டகாலம்
வாழ்வதிலும் பார்க்க
ஒழுக்கமுள்ளவனாக சிலகாலம் வாழ்வதே
சிறந்தது.

---

# பேதம் அகற்ற வந்தவன்



லெப்டினன்ட் பாரூக்

அகமதுலெப்பை ஹனிபா

அக்கரைப்பற்று.

இவன் விடுதலையை நேசித்தவன். வீணர்களை வெறுத்தவன். தமிழ் முஸ்லிம் எனப் பேதம் காட்டி எங்களுக்குள் பிரிவை ஏற்படுத்த முனைந்தவர்களுக்கு ஓர் சவாலாக வாழ்ந்து காட்டியவன் இந்த விடுதலை வேங்கை. அக்கரைப்பற்று தந்த அன்பான இவனின் விடுதலை உணர்வு முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமல்ல தமிழ் சமூகத்துக்கும் தான் விழிப்பை ஏற்படுத்தியது. தத்தம் சுயலாபம் கருதி முஸ்லிம் தமிழ் சமூகங்களுக்குள் வேற்றுமை காட்ட நினைப்பவர்களுக்கு இவனின் பெயரால் நாம் கூறுகிறோம் "எங்களுக்குள் பிரிவை எவராலும் ஏற்படுத்த முடியாது."

# சுதந்திரம் வேண்டும்

உயிரினும் மேன்மையானது சுதந்திரம்
உண்மையிலும் உண்மையானது சுதந்திர வாழ்வு.

சத்தியம் நிலைக்கும் சமத்துவ நாட்டில் தான்
நித்திய வாழ்வின் பொருள் அங்கு தான் புரியும்.

இலட்சியப் பாதை என்பது கடினமானது.
பெறப்போகும் பலனே மகத்துவமானது.

மகத்துவ வாழ்வுக்காக மரணத்தை சகிப்பது
போராட்ட நாடுகளில் புதிரானது அல்ல.

நாம் உண்மையில் வாழ விரும்புகிறோம்.
பொய்மை வாழ்வு எமக்கு வேண்டாம்

உழைக்க வேண்டும் அது எம் பொறுப்பு
ஏய்க்க வேண்டும் அதுவல்ல எம் நினைப்பு

நாம் போராடுவது உண்மையான விடுதலைக்காக
விடுதலை போல வேறு ஒன்றிற்காக அல்ல.

விலை:- 5/-